# ஞானச்சுடர்

புரட்டாதி 2023


309ஆவது மலர்




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்**
**உண்மை யறிவே மிகும்.**

**பொருள் :** நுட்பமான நூல்களை ஒருவன் கற்றாலும் அவனுக்கு ஊழின் வலியால் உண்டாகக்கூடிய தப்புணர்ச்சியே மேற்பட்டு நிற்கும். (373)

**இருவே றுலகத் தியற்கை திருவேறு**
**தெள்ளிய ராதலும் வேறு.**

**பொருள் :** உலகத்தின் இயற்கை இரண்டு வேறு தன்மைகளை யுடையது; செல்வராவதற்குரிய ஊழ் வேறு; அறிவுடையராதற் குரிய ஊழ் வேறு. (374)

---

# நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**அன்பே வடிவாய் அமைந்த துறவீ**

அன்பே வடிவாய் அமைந்த துறவீ
அன்பே யன்றி யாற்றலு முண்டோ?
இன்பமா முலகி லெங்கணுஞ் செறிக
துன்பமாம் மாயை தொடரா தொழிக
எல்லியு மல்லு மீசனைப் போற்றுக
கல்லுங் கரையக் கவிமழை சொரிக
கங்குல் பகலற்ற காட்சி பெறுக
எங்குஞ் சிவத்தைக் கண்டின் புறுக
மங்குவார் செல்வம் மதியா தொழுகுக
இங்கு நீ,
இருந்த படியே யிருந்து வாழுதி
அருந்துய ருன்னை யடையா வன்றே. 01

வஞ்சகம் நீங்கி வாழுந் துறவீ!
அஞ்செழுத் துட்பொரு ளாகிய வமலனை
நெஞ்சத் துள்நீ வைத்து வணங்குதி
கஞ்சத் தேவனுங் கண்ணனுங் காணார்
தன்போற் பிறரைத் தானி னைந்திடு
உன்போற் பிறரிவ் வுலகி லுண்டோ
முன்பு நீ,
செய்த வல்வினை தீர்ந்திடுந் தியானஞ்
செய்தினஞ் சீவன் சிவனே யன்றோ. 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3  சுடர் - 309

**2023** **பொருளடக்கம்** **புரட்டாதி**


| | | |
|---|---|---|
| அர்த்தம் உள்ள இந்துமதம் | மு. செல்லத்தம்பி | 01 – 04 |
| ஆனந்த சாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 05 – 09 |
| துன்பம் நீங்க | சிவ. அன்பு | 10 – 11 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 12 – 13 |
| வாழ்வாவது மாயம்... | பு. கதிரித்தம்பி | 14 – 15 |
| தீபாவளி | கு. சோமசுந்தரம் | 16 – 19 |
| அன்பும் மதங்களும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 20 – 21 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 22 – 24 |
| வல்லசுரர் மாள... | சிவக்கொழுந்து | 25 – 28 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 29 – 32 |
| யார் சீதை | திருமதி பொ. திலகவதி | 33 – 35 |
| செல்வச்சந்நிதி முருகன்... | பா. தனபாலன் | 36 – 37 |
| திருமுருகாற்றுப்படை பாடிய... | சிவம் | 38 – 39 |
| தமிழ்ப் பெண் கவியரசிகள் | இரா. செல்வவடிவேல் | 40 – 41 |
| வாழ்க்கையின் அத்திபாரமே... | சி. நற்குணலிங்கம் | 42 – 44 |


**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**


**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசமயப் பேரவைத் தலைவர் ஈசான சிவ. சக்திகிரீவன் அவர்கள் வழங்கிய

# ஆசிச்செய்தி

## ஆற்றங்கரையான் அரவணைப்பில் ஓர் அற்புத ஞானி

அறம் என்ற சொல்லிற்கு பொருள் காண முற்பட்டோர் அதனுள் மூழ்கி வெளிவராத பெருமை அறத்திற்கு உண்டு. அறம் என்ற தமிழ்ச்சொல் தர்மம் என்று வடமொழியில் பேசப்படும். வடமொழி சரி தமிழ்மொழி சரி இந்த அறத்தை, தர்மத்தை எவ்வளவு மேன்மையாக உயர்த்தி சீர்மையாக்கியிருக்கிறதென்பதை இவ்விரு மொழிப்புலமையுள்ளோர் ஆராய்ந்து வெளிப்படுத்திய சான்றுகள் இதற்கு ஆதாரமுமாகிறது. அதனாலன்றோ ஔவையார் அறம் செய விரும்பு என்றார். அறம் செய்ய வேண்டும் என்பதற்கு அப்பால் அறம் செய்யவேண்டும் என்ற உணர்வோடும் எக்கணமுமிரு என்பதே இது.

இத்தகைய உணர்வு படைத்தோர் தமிழ் நிலத்தில் இருக்கவேண்டுமென்பதற்காக தடாதகைப் பிராட்டி என்ற பெயரோடு அம்பிகை வீற்றிருக்கிறாள். முருகப்பெருமானும் அற ஞானத்தைப் போதிக்கும் வகையில் நாவற்பழத்தை ஔவைக்கு ஈந்து ஔவையையே வியக்க வைக்கிறான். இப்படி அநேக கோடி சம்பவங்களைக் கூறிக்கொண்டே இருக்கமுடியும். இவை எல்லாம் எமது ஞானநூல்களிலும், அறநூல்களிலும் காண்பவையே. எமது வாழ்வியலில் இது எங்கே என்று கேட்கத்தோன்றலாம். முன்னர் வீட்டிற்கு ஒருவர் வந்தால் அவருக்கு உணவோ ஏதும் பாணமோ மகிழ்வோடு கொடுப்பார்கள். இன்றைய காலத்தில் ஒருவர் வீட்டிற்கு வந்தால் அவரிடம் கூறுவோம் மதியமாகப் போகிறது நீங்கள் சாப்பிட வேண்டும். நாங்கள் தேனீர் அல்லது ஏதும் பானம் தந்தால் உங்களுக்கு அசௌகரீகமாக இருக்கும் என்றுகூறி, தேனீரோ, பானமோ கொடுக்காததோடு மதியச் சாப்பாடும் கொடுக்காது நாம் தப்பித்துக்கொள்கிறோம்.

இப்படியான அற்புதமான ஓர் உலகில் இன்று வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இதற்குள்ளும் ஆற்றங்கரையில் அறம் பேணும் அனுபவ ஞானியாக மோகனதாஸ் அவர்கள் போன்றோர் இருக்கின்றனர் என்றால் அதுவும் அற்புதத்தில் அற்புதமே. இவர் ஒரு தர்மத்தைச் செய்ய நினைத்தவுடன் ஏதோ ஓர்வகையில் ஒரு அன்பரால் பணம் வந்து சேர்கிறது. அவர் அந்தப் பணியை நிறைவு செய்துவிட்டு நிமிர்கிறபோது இன்னோர் பணி வருகிறது. அதற்கு உதவ ஒருவர் வருகிறார். இது இவருக்கு முருகன் அருட்கடாட்சம் உண்டென்பதை நிறுவுகிறது.

நமர், தமர் என்று பாராது இலங்கை முழுவதும் தனது பெயரைப் பொறியாது பல்வேறு சமய, சமூக அபிவிருத்திப் பணிகளுக்கு வாரி வழங்குவதில் இவர் ஓர் அற்புதப் பிறவி. சாமானியராக அனைவரோடும் அன்பொழுகப் பழகும் இவர் அதைச் சரியாக நிறைவேற்ற வேண்டும் என்ற அவாவால் சண்டித்தனம் விடவும் தயங்குவதில்லை. இவையெல்லாம் அவருக்கோர் அருள் விளையாட்டாகவே அமைகிறது. எத்தனைபேர் வந்தாலும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வயிறாரச் சாப்பிடலாம். இது மருந்து கொட்டக்கூடாது அளவாக வாங்கிச் சாப்பிடு என்று தாய்போல் நிற்கும் இவர் தாடியும் சடையும் சதா ஞானி என்பதை உணர்த்தியே நிற்கிறது. இவை அனைத்துக்கும் மேலாக முருகப்பெருமானே கனக சபேசனாக இருக்கிறான் என்பதை உணர்த்தும் வகையில் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜ மூர்த்தியை சதா வழிபாடாற்றும் பேறுள்ளவராகக் காணப்படுகிறார். கைவிடமாட்டான் கனகசபேசன் கருணைக் கடலோன் கார்த்திகேசன் என்ற நல்லூர் சேந்தன் எழுதிய பாடல் எமக்கு ஞாபகத்திற்கு வருகிறது. இவர் ஆற்றங்கரையானின் அரவணைப்பிலுள்ள அற்புத ஞானி என்பதை உணர்வார் உணர்வார்.

"அருண தள பாத பத்மம் அனுதினமுமே துதிக்க அரியதமிழ் தான் அளித்த மயில் வீரா" என்று அவனடி வாழ்த்தி அன்பர் மோகனதாஸ் அவர்களுக்கு அனைத்துப் பேறுகளும் அவனருளால் அருள் மழையாகச் சொரியவேண்டுமென எமது வழிபடு தெய்வமான ஆடல் வல்லானைத் தியானித்து நிறைவு செய்கிறேன்.

சி. சக்திகிரீவன்

தலைவர் இந்துசமயப் பேரவை - யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் ஆவணி மாத வெளியீடு

## வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரை:

ஞானச்சுடர் 308ஆவது ஆவணி மாத மலருக்குரிய வெளியீட்டுரை ஆற்ற இருந்த அன்பர் தவிர்க்கமுடியாத காரணத்தினால் வருகை தரமுடியாத நிலையில் மதிப்பீட்டுரை ஆற்ற வந்த இளைப்பாறிய அதிபர் திரு இரா. ஸ்ரீநடராசா அவர்கள் கூறிய ஒருசில கருத்துக்கள் வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரையாக அமைந்திருந்ததை நோக்கக் கூடியதாக இருந்தது.

அவர் தம் மனத்தில் எழுந்த உள்ளக் கருத்தை நோக்குமிடத்தில் சந்நிதியான் ஆச்சிரமம் ஆரம்பகாலம் முதல் இன்றைய காலம் வரை ஆற்றும் பணிகளின் மகத்துவத்தை எடைபோட்டுப் பார்த்ததைப் போன்று ஒவ்வொரு கருத்தையும் நிறு திட்டமாக வரையறுத்து கூறியதைப் பார்க்குமிடத்து எவ்வளவு தூரம் ஆச்சிரமத்தின் பணிகளை நன்கு உள்வாங்கியதை உணரக்கூடியதாக இருந்தது.

அடுத்ததாக ஓர் ஆன்மீக மலர் 308 மாத காலமாக தொடராக வெளிவந்து கொண்டிருப்பதும் ஆன்மீக மலர்கள் பல இடத்திலும் வெளிவந்தாலும் ஞானச்சுடர் போன்று பிரகாசிக்க முடியாமல் போய்விட்டது. ஆனால் ஞானச்சுடர் மலருக்குரிய ஆக்கங்கள் வழங்கும் அன்பர்களும் அதைப் படித்துணரும் வாசகர்களும் அர்ப் பணிப்புடன் கூடிய சேவையும் இவை எல்லாவற்றுக்கும் மேலாக சந்நிதி வேற் பெருமானுடைய திருவருளும் காரணம் என்றுதான் கூறவேண்டும். அதனடிப்படையில் இம் மாத மலரில்கூட ஒரு சில ஆக்கங்களில் அமைந்துள்ள கருத்து எம் எல்லோரையும் ஏதோ ஒரு வகையில் சிந்திக்கக் கூடியதாக அமைந்திருக்கின்றது. அக் கருத்துக்களை இச் சபையில் கூறினால் அதன் சுவாரசியம் குறைந்துவிடும். ஆகையால் வாசகர்களாகிய நீங்கள் மலரைப் பெற்று படிக்கும்போது நன்கு புரிந்துகொள்வீர்கள். இங்கே நடைபெறும் சகல பணிகளுக்கும் சந்நிதி வேலவனது அருளாட்சி கிடைத்திருப்பதே ஒரு முக்கிய காரணம் என்று கூறி தனது வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

நாம் எல்லோரும் உயர்ந்திருக்க வேண்டும். நம் வாழ்வு உயர வேண்டும் என்று தான் கருதுகின்றோம். ஆனால் உயர்வு பெற்றவர் - பெறுகின்றவர் ஒரு சிலரேயாவார். அதற்கு நாம் உயர்வு அடையவேண்டும் என்று எண்ணுகின்றோமேயன்றி அதற்குரிய வழிவகைகளை நன்கு சிந்திக்கின்றோமில்லை. சிந்தித்து அதனைச் செயல்முறையில் கொண்டு வருகின்றோமில்லை.

இவ்வுலகில் பணத்தினால் உயர்ந்தவர்களும் படிப்பினால் உயர்ந்தவர்களும் உலகம் போற்றும் உயர்வு பெறுகின்றவர்களில்லை. ஆகவே, பணமும், படிப்பும், குலமும், பதவியும் நமக்கு நிச்சயமாக உயர்வைத் தரமாட்டா. எனவே, அவைகளை உயர்த்தும் முயற்சியுடன் நாம் நின்று விடக்கூடாது. நமது உள்ளம் உயர்ந்தால் நாம் உயர்வு பெறமுடியும். நம்மை நாமே சோதித்துப் பார்க்கும் வழக்கம் ஒவ்வொருவருக்கும் உண்டாக வேண்டும். இவ்வாறு அடிக்கடி நம்மை நாமே சோதிப்பதனாலே உள்ளத்திலே உள்ள மாசுக்கள் நீங்கி புனிதத்துடன் கூடிய அன்பு உண்டாகும். அன்பு நிறைந்த உள்ளம் படைத்தவனே உண்மையாக உயிர் வாழ்க்கையுடையவனாவான். நாம் ஒருவர்மீது பயன் கருதாமல் வைக்கும் அன்பு தூயது. அவ்வாறான அன்பு அருளாக, தியாகமாக மாறவேண்டும்.

பணத்தினால் படிப்பினால் உண்டாகாத பெருமையை தியாகத்தினால் அடைய முடியும். தனக்கென்று வாழ்கின்றவன் சிறியவன் பிறர்க்கென்று வாழ்கின்றவன் பெரியவன். தனது சொல் செயல் உடமை எல்லாம் பிறருக்கே அர்ப்பணஞ் செய்துவிட்டு புகழையும் புண்ணியத்தையும் கூட விரும்பாமல் தியாகம் புரிந்து வாழ்கின்றவர்களே நல்லவர்களாவர். அவர்கள் சொல்லிலும் செயலிலும் தன்னலம் இருக்காது. இத்தகைய தியாகவுணர்ச்சியே மனிதனைப் புனிதனாக்கும். இவ்வாறான அன்புடன் கூடிய தியாகவுணர்ச்சி எல்லோரிடமும் இருக்க வேண்டும்.

வாழ்க்கையிற் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளுங்கள். சந்தர்ப்பங்கள் எழுப்பும் அலைகள், நிகழ்ச்சிகள் தோற்றுவிக்கும் இழுபறிகள், உங்களை இங்கும் அங்கும் தூக்கிப் போட்டுத் தடுமாற வைக்கலாம், மேலும் கீழுமாகத் தள்ளி அலைக்கழிக்கலாம். ஆனால் நீங்கள் உங்கள் எண்ணத் திலும் செயலிலும் பெருந்தன்மையோடு இருக்க வேண்டும். அப்போது நீங்கள் என்றும் பவுத்திர மாக இருக்கலாம். இதயத்தில் மலரும் இந்தப் பெருந்தன்மை உங்கள் செயல்களில், உங்கள் ஒழுக்கத்தில், உங்கள் பணியில் பளிச்சென்று ஒளிவிட வேண்டும். உங்கள் கடமைகளை ஏற்கும் போது முகத்தைத் தொங்கப் போட்டுக் கொள்வதும், சலித்துக்கொள்வதும் வாழ்க்கையின் சுமையில் உங்களை நீங்களே இழுத்துக்கொண்டு செல்வதும் உங்கள் வாழ்வை வேதனை மிகுந்த, பலனில்லாத ஒன்றாக ஆக்கிவிடும். ஒரு வேலையைச் செய்வதற்கு உங்களுக்கு எவ்வளவு மணி நேரம் ஆயிற்று என்பதை ஒரு குறையாகச் சொல்லி முணுமுணுக்காதீர்கள். உங்கள் அன்றாட வேலையில், ஒவ்வொரு மணிநேரத்திலும் உங்களை எவ்வளவு தூரம் மனமார ஈடுபடுத்திக் கொண்டீர்கள் என்று மதிப்பிட்டுப் பார்க்கும் பெருந்தன்மை உங்களுக்கு இருக்க வேண்டும். அன்பு கண்கூடாக வெளிப்படும் சந்தர்ப்பமே பணி என்பது. பிறரிடம் நீங்கள் காட்டும் அன்பை மன மலர்ச்சியுடன் வெளியிடுவதே பணியாற்றுவது. ஒவ்வொரு நாளும் செய்யவேண்டிய பொறுப்புக் களை, முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு, வேதனையும் துயரமும் வெளிப்பட இழுத்து இழுத்துச் செய்வது பிரயாசைதான். மனம் கலந்து ஈடுபட்ட பணியின் மூலமாகவே சாதனையில் வெற்றி அடையும் பெருமிதம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr. K. இராதாகிருஷ்ணன்**

(மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

**இராசையா குகதாசன்**

(யாழ்ப்பாணம்)

**சி. கனகசபை**

(யாழ்ப்பாணம்)

**அ. மகேந்திரராசா**

(மல்லாகம்)

**சி. செல்லையா**

(கரவெட்டி)

**M.S.K. மகேஸ்வரன்**

(கொக்குவில்)

**க. கிரிவேல்**

(மட்டுவில்)

**வ. கதிர்காமநாதன்**

(சுண்ணாகம்)

**S. மகாதேவன்**

(உரும்பராய்)

**K.S. கணபதிப்பிள்ளை**

(கைதடி)

**தி. கோபாலகிருஷ்ணன்**

(புத்தூர்)

**உரிமையாளர்**

(விஜிதா அரிசி ஆலை, அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வே. தர்மராசா**

(பொதுமுகாமையாளர், சுண்ணாகம்)

**செ. புவனேந்திரராசா**

(மதுஷன் பல்பொருள் வாணிபம், உடுப்பிட்டி)

**செல்லையா சிவசம்பு**

(இளை.அதிபர், வளலாய்)

**த. சிவகுருநாதன்**

(துவாரகா வெதுப்பகம், நவிண்டில்)

**காரை. M.P அருளானந்தன்**

(ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்)

**ப. நடராசாக்குருக்கள்**

(ஆவரங்கால், புத்தூர்)

**இ. ராதாகிருஷ்ணன்**

(ஏழாலை மத்தி, ஏழாலை)

**க. ஸ்ரீஸ்கந்தராசா**

(இளை. அதிபர், அச்சுவேலி)

**சோ. தனராசா**

(வாணிமஹால், வட்டுக்கோட்டை)

**நாகேந்திரம் கண்ணம்மா**

(மானிப்பாய்)

**வ. கந்தசாமி**

(பிரியங்கா பான்சி, உடுப்பிட்டி)

**சி. சிவச்செல்வம்**

(இளை. அதிபர், சந்நிதிவீதி, அச்சுவேலி)

**கு. மதனமோகன்**

(சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)

**ஆ. திருநாவுக்கரசு**

(இணுவில் மேற்கு)

**நா. கனகலிங்கம்**

(தபால் வீதி, கொக்குவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**B.R. ரஞ்சன்**

(சர்வதேச லயன்ஸ் கழக உறுப்பினர், யாழ்ப்பாணம்)

**சி. லிங்கேஸ்வரி**

(மதவடிலேன், சுதுமலை)

**சு.சண்முகசுந்தரம்**

(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)

**க. தெய்வானைப்பிள்ளை**

(V.M. றோட், பருத்தித்துறை)

**பார்த்தசாரதி விஜயகுமார்**

(சுழிபுரம்)

**திருமதி. ப. தேவமனோகரன்**

(கந்தபுஷ்கரணி, நவாலி)

**அ. ஆறுமுகம்**

(உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை)

**கயிலைநாதன் மங்களகாந்தி**

(வேழலகம், ஆனைக்கோட்டை)

**இ. இந்திரலிங்கம்**

(இணுவில் கிழக்கு)

**இ. சர்வேஸ்வரன்**

(கலைவாணி வீதி, கோண்டாவில்)

**த. விசயகுமாரன்**

(பழம்றோட், கந்தர்மடம்)

**செல்வி.சு. பகீரதி**

(செட்டித்தெரு, நல்லூர்)

**கனகேஷ்வரன் பிரகாஷ்**

(கைதடி கிழக்கு)

**சி. செல்வரத்தினம்**

(நீர்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐ. ராமச்சந்திரா**

(லவ்லேன், உடுவில்)

**சி. சகுந்தலாதேவி**

(வங்களாலேன், மல்லாகம்)

**அ. ராஜ்சங்கர்**

(உரும்பராய்)

**கு. நாகேஸ்வரி**

(நவிண்டில்)

**த. லதாசந்திரிக்கா**

(மகாத்மா வீதி, நெல்லியடி)

**க. நற்குணராஜா**

(பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி)

**செ. இராஜேஸ்வரி**

(15ஆம் கட்டை, புறாப்பொறுக்கி)

**செ. நிமலராஜ்**

(கோப்பாய்)

**த. பூபாலன்**

(கண்ணாமலை வீதி, உடுப்பிட்டி)

**கா.ஆ. சச்சிதானந்தம்**

(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

**தினேஸ் கவிதா**

(ஆவரங்கால்)

**சி. சிவசுப்பிரமணியம்**

(அச்சுவேலி)

**நா. கமலநாதன்**

(வட்டுவினி அம்மன் கோயிலடி, இணுவில்)

**செ. சோதிப்பெருமாள்**

(சரஸ்வதி மஹால், இணுவில்)

**சி. வேலாயுதம்**

(இளை. அதிபர், வதிரி, கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தம் உள்ள இந்துமதம்

– திரு முருகுப்பிள்ளை செல்லத்தம்பி அவர்கள் –

"அர்த்தம் உள்ள இந்துமதம் என்ன சொன்னது - அது
அவர் அவர் கடமைகளை வகுத்து தந்தது"

ஆண்டவன் உலகத்தைப் படைத்தான். அதில் அனைத்து உயிர்களையும் உருவாக்கினான். இந்த உயிர் இனங்களில் சிறப்பாக உய்திபெற்று விளங்கிவர முதல்த்தரமாக வேண்டப்படுவது மனிதவர்க்கமே. இந்த மனிதகுலம் உலகில் நீடித்து வாழ்வு பெறுவதற்கு உருவாக்கிய இறைவனே ஒத்தாசை புரியவேண்டும். இதற்காக அவன் தாள் வணங்கியே அவன் அருளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த அருள் வளங்களை அடையப்பெறுவதற்கு அந்தரங்கமாய் எமக்கு வேண்டிய அணுகுமுறைகள் தான் என்ன? அவற்றையே பலதரப்பட்ட மதங்கள், மார்க்கங்கள், சமயங்கள் என வகுத்து நிற்கிறோம்.

அகிலம் முழுவதும் பரந்து வாழும் மக்கள் தங்கள் வசதி வாய்ப்புக்கள், விருப்பு வெறுப்புக்கள், குணம் குறிகள் முதலான தோற்றப்பாடுகளை அடையாளப்படுத்தி வரலாறுகளாக உள்ளடக்கி மதங்கள் தெய்வங்கள் என்று ஆன்மீக வாழ்வை முன்னெடுத்து வாழ்ந்து வருகிறார்கள். இந்த பலதரப்பட்ட மத வாதிகள் தங்கள் ஆன்மீகம் தழுவிய வாழ்வில் உயர்ந்தோ தாழ்ந்தோ நிலைத்தோ நிலை தடுமாறியோ பலதரப்பட்ட வடிவங்களில் வாழ்ந்து வருவது கண்கூடு. இந்த நிலைப்பாட்டில் இத்தகைய மதங்களில் ஒன்றான இந்து மதமோ மிகவும் ஆக்கபூர்வமான அர்த்தமுள்ள நிலை மாறாத உயர்ந்த கொள்கைகளை, ஆன்மீக அறநெறிகளை அடித்தளமாகக் கொண்டு ஆளுமை புரிந்து வருகின்றது. உலகெங்கும் பிரபல்யம் அடைந்து வரும் இந்து மதமானது யாரால் எங்கே எப்போது உதயம் பெற்று எழுந்து வந்ததென்று யாரும் தெரிந்துகொள்ள முடியாத பெரும் புதிராகவே இன்றுவரை விளங்கி வருகிறது. முந்திய காலத்தில் தமிழ் மக்கள் சிந்து நதிக்கரையில் வாழ்ந்து வந்ததும் பின் பிறநாட்டவரினால் அது இந்து நதியென மாற்றமடைந்ததும் அங்கு வாழ்ந்தவர்கள் இந்துமதத்தை கடைப்பிடித்து வந்ததும் பின்னால் சொல்லப்படும்.

சிவபெருமானையே முழுமுதல் கடவுளாகக் கொண்ட சைவ சமயத்தை தலைமேல் கொண்டு நிற்கும் இந்துமதமானது உலகளாவிய ரீதியில் உறுதிநிலை குன்றாத பிரசித்திபெற்ற ஒரு மதமாக செல்வாக்கு செலுத்தி வருகிறது. அதாவது மனித குலத்தின் ஆரம்பம் முதல் அஸ்தமனம் வரை இருக்கவேண்டிய உயரிய நடைமுறைகள் செயல்முறைகளோடு கூடிய வாழ்வியல்புகளான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, பண்பாடு, பழக்கவழக்கங்கள், பொறுமை, புரிந்துணர்வு, ஈன இரக்கம், விட்டுக்கொடுப்பு, கல்வி, கலாசாரம் என்பன எல்லாம் இந்துமதத்தின் உயர்நிலைக்குக் கிடைத்த ஏணிப்படிகளே என்றால் அது மிகையாகாது. இதுமட்டுமல்லாது இம்மையோடு மறுமையிலும் கூட மனித குலத்தின் இயல்புகளையும் தத்துவங்களையும் இந்து மதம் தன் தோற்றப்பாட்டில் இணைத்துக்கொண்டே உருவானது. இதற்கு அண்டசராசரங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழற்சி முறைகளும் கிரகங்கள்கூட விதிவிலக்கல்ல. இப்படியாக உலக இயக்கத்திற்கு இன்றியமையாததாக விளங்கிவரும் இந்து தர்மநெறி தளர்வுற்று அதர்மம் தலைதூக்கி உலகம் அவதிப்படும் போதெல்லாம் அதர்மத்தை அழித்தொழித்து தர்மத்தை நிலைநாட்ட ஆண்டவனே அவதாரபுருஷனாக மனித வடிவில் அவதரிக்கின்றான்.

## இல்லாதது உருவானது. இயற்கையின் வசமானது.

இயற்கையின் தாபம் ஓங்கி இணையற்ற வடிவமாகி பரிணாம வளர்ச்சியினால் பல் உயிர்கள் தோற்றம் பெற்று பூச்சியத்துக்குள்ளே ஒரு இராச்சியம் உருவானது. பிறப்பு இல்லாமல் இறப்பு இல்லை. இறப்பதற்கென்றே மனிதன் பிறக்கின்றான். அப்படியில்லாவிடின் இல்லாத உலகமானது உருவானதில் எந்தவித அர்த்தமும் இல்லாமல் போய்விடும். இதனை இந்துமதம் வலியுறுத்துகின்றது.

தர்மமே வடிவமாகக் கொண்ட பாண்டவர்க்கும் அதர்மமே அத்திவாரமாகக் கொண்ட கௌரவர்க்கும் இடையே அபாண்டமான யுத்தம் ஒன்று ஆரம்பமாகின்றது. இரு பக்க சேனைகளும் எதிர் எதிரே சமுத்திரம்போல் படைதிரண்டு நிற்கிறார்கள். சகோதரர்களான பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் உன்னதமான போர்ப் பயிற்சிகளை கற்றுக்கொடுத்த ஆசாரியார்களான பேரன், பூட்டன், பாட்டன் என்ற பீஷ்மர், துரோணர், விதுரர் முதலான மகாரதர்கள் துரதிஷ்டமாக பாண்டவர்களுக்கு எதிராக போரிட வந்து முன்னணியில் நிற்கிறார்கள். இவர்களைக் கண்ணுற்ற, தர்மத்தின் விளிம்பிலே ததும்பி தேங்கி நிற்கும் பாண்டவர்களின் குடும்பத்தில் பிறந்த சிறந்த அறிவாளியும் எக்காலமும் வீரர்களால் கொண்டாடப்பட்டு வரும் ஒப்பற்ற வீரனுமாகிய (பார்த்தன்) அருச்சுனன் இவர்களைக் கொன்றா நாம் இப்புவியை ஆளவேண்டும் என்று மனம் தளர்ந்து சோர்வடைந்து மதிமயங்கி தேரின் கொடிமரத்தில் சாய்ந்தான்.

இதைப் பார்த்து நின்ற பார்த்தசாரதி பரந்தாமன் பாரதூரமான ஒரு நிலைக்கு தள்ளப்பட்டு விட்டான். தள்ளப்படவேண்டிய தேவை அவசியமாயிற்று. மனித வாழ்வின் அடிச்சுவட்டையும் அதன் அந்தரங்கமான தத்துவங்களையும் அட்டவணைப்படுத்தி ஆவணங்களாக உள்ளடக்கமாக உபதேசிக்கவேண்டிய பாரிய பொறுப்பிற்கு உள்ளானான். இவ்வேளையில் பார்த்தனை நோக்கிய பரந்தாமன் "மரணத்தை எண்ணிக் கலங்கிடும் விஜயா மரணத்தின் தன்மை சொல்வேன் கேளாய். மானிடர் ஆன்மா மரணம் எய்தாது. மறுபடி பிறந்திருக்கும். மேனியைக் கொல்வாய். மேனியைக் கொல்வாய். வீரத்தில் அதுவும் ஒன்று. நீ விட்டுவிட்டாலும் அவர்களின் மேனி வெந்துதான் தீரும் ஓர்நாள் என்றும் மண்ணில் உதித்த உயிர் மண்ணில் மடிவதென்பது மானிடத்தின் தீர்ப்பு. இதில் எந்தவித மாறுபாடும் இல்லை. ஆதலால் மனதைத் திடப்படுத்திக்கொள். பலனை எதிர் பாராதே. அழிவிற்குக் காரணமான ஆசைக்கு இடம்கொடுத்து மகத்தான கடமையை மறந்துவிடாதே" என்று உபதேசம் செய்கின்றான். இதனையே "அர்த்தம் உள்ள இந்துமதம் என்ன சொன்னது - அது அவர் அவர் கடமைகளை வகுத்து தந்தது. ஆசைகொண்ட வேதியனை ஆட்டி வைத்தது. அதுதான்

*மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் காட்டுவது துன்பங்களே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளியிட நெருப்பை இங்கே மூட்டி வைத்தது" என்று கவியரசு கண்ணதாசன் பாடிச் சென்றான்.

இந்த வகையில் இவர்களைக் கொன்றா இப்புவியை ஆளவேண்டும் என்றால் இதனால் ஏற்படும் விபரீதம் எத்தகையது? மனித குலத்தின் மாட்சிமையை மேம்படுத்தும் பேருதவியாய் புகுந்துகொண்ட இந்து தர்மமானது "உலகம் சமநிலை பெறவேண்டும். உயர்வு தாழ்வில்லா நிலை வேண்டும்" என்ற இலக்குகளை முன்னிறுத்தி எல்லா நிகழ்வுகளையும் அதன் பெறுபேறுகளையும் தானே நிர்வகித்து ஈற்றில் தன் கடமையை நிலைநாட்டுவதற்கு காரணமாய் அமைகிறது என்பதை கவிஞன் "தர்மம் உன்னைத் தேடி ஒரு தாரம் என்று வந்தது. தாய் தந்தை தெய்வம் எல்லாம் நீதானே என்றது. தன் தன் தலையில் உன் பழியைத் தாங்கிக்கொண்டு நின்றது. தாங்கும் வரையில் தாங்கிவிட்டு தாழாமல் சாய்ந்தது" என்று பாடி முடித்தான்.

கர்ணன் ஒரு மகா வீரன். காருண்ய சீலன். இரப்போர்க்கு இல்லை என்னாது ஈய்ந்தருளும் வள்ளல். தெய்வீக தேஜஸ் விளங்கும் கவச குண்டலங்களோடு பிறந்தவன். ஆனால் செஞ் சோற்றுக் கடன் தீர்ப்பதற்காக கௌரவர் பக்கத்துடன் சேர்ந்து துரியோதனனோடு வஞ்சனைக்கு துணை போனவன். வஞ்சனையே உருவானவன். இந்த வஞ்சனை என்பதை பிறிதோர் வஞ்சனையால்தான் வென்றெடுத்து அவன் வாழ்வை வதம் செய்யவேண்டும். முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்னும் இந்து மதம் கூறும் பிரகடணத்தை பரந்தாமன் கொண்டிருந்தான். இதற்குப் பெயர் வஞ்சனையல்ல. அர்த்தம் உள்ள இந்துமதத்தை அலங்கரிக்கும் வழிமுறை வாழ்வின் விமோசனம்.

கொலை என்பது உலகில் உள்ள கொடுமைகளில் முதன்மையானது. மிகவும் தீமையானது. இந்தக் கொலையானது இன்னொரு வகையில் உலக நன்மைகளில் முதன்மையானதும் உலக சமநிலைக்கு உகந்ததாகவும் கொள்ளப்படுகிறது. இதை உவமானப் படுத்துவதே அகிலம் போற்றும் அண்ணல் காந்திஜி அவர்கள் நோயால் துடித்துக்கொண்டிருந்த கன்றுக்குட்டியைக் கொன்றுவிட சொல்லியிருப்பது. இதுவே கருணைக் கொலை என்பதாகும். அங்கே கொலை இங்கே கருணை. அங்கே பாவம் இங்கே புண்ணியம். இதற்கு இடையேதான் இந்துமதத்தின் நர்த்தனம். அதாவது நதியினில் வெள்ளம் கரையினில் நெருப்பு இரண்டிற்கும் நடுவே இறைவனின் சிரிப்பு.

எந்த ஒரு மனிதனும் தன் இயல்பான வாழ்வை ஒழுங்கான முறையில் நீதிநிலை தவறாமல் முன்னெடுத்து வரலாம். அவன் நாஸ்திகனாகவும் இருக்கலாம். மறைந்த பாரத பிரதமர் ஜவகர்லால் நேரு கூட ஆண்டவனின் அருகதை அற்றவர். தனது அஸ்தியை வயல் வெளிகளில் தூவுமாறு பணித்திருந்தாலும், இவர்கள் எல்லாம் ஆண்டவனின் அருகதையில்லாது இருந்தபோதும் இவர்களின் வாழ்வுப் பயணம் யாவும் இந்துமதம் குறிகாட்டும் ஆண்டவனிற்கு அர்ப்பணமாகவே அமைந்து விடுகின்றது.

இந்துமதம் ஒருபோதும் மற்றைய மதங்களை நிந்திப்பதில்லை. குறைகூறி விமர்சிப்பதும் இல்லை. ஏனைய மதங்களிற்கெல்லாம் தாயாக விளங்கி வருகிறது என்று கூறிய சுவாமி விவேகானந்தர் ஒருமுறை அமெரிக்காவில் உள்ள சிக்காக்கோ நகரில் நடைபெற்ற உலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வமத மாநாட்டில் இந்துமதத்தின் சிறப்பியல்புகளையும் மேன்மைகளையும் விபரித்து விளக்கி உரையாற்றியதை உலகம் முழுவதும் அறிந்து வியப்பில் ஆழ்ந்தது.

இந்துமதம் கொண்ட இயல்புநிலையில் இந்துத் தெய்வங்களின் ஆளுமையில் மனித இலட்சனைகள் யாவும் மூழ்கிக் கிடக்கின்றன. அழகு, அருள், அன்பு, தமிழ் இவை எல்லாம் இந்துசமயம் அருளித் தந்த வழிமுறைகளே. "அழகென்ற சொல்லுக்கு முருகா. உந்தன் அருளன்றி உலகிலே பொருளேது முருகா என்றும் அன்புக்கு எல்லையோ முருகா என்றும் அழகும் அவன்தான் அருளும் அவன்தான் அன்பும் அவன்தான் கடல்கொண்டு அழியாத தமிழானவனும் அவன்தான் என்று கவிஞனும் அருளாளர்கள் தன்னைப் போற்றி செய்யுமாறு பதிகங்களுக்கும் பாசுரங்களுக்கும் முருகன் தமிழில் அடியெடுத்துக் கொடுத்ததாகவும் நாம் அறியக்கிடக்கின்றது. மேலும் இஸ்லாம் போன்ற மதங்கள் வேறு வழிபாடுகளைக் கொண்டிருந்த போதும் தமிழ் மொழியையே தங்கள் தாய் மொழியாக கொண்டிருக்கும் பெருமை இந்து மதத்திற்கே உரியது.

இன்னும் பிறநாட்டு புதை பொருள் ஆராய்ச்சியாளர்களால் தமிழர்கள் வாழ்ந்து அழிவுற்ற இடங்கள்தோறும் ஆராய்ச்சி செய்து அங்கே கிடைக்கப்பெற்ற தரவுகள், தகவல்கள் வரலாற்றுச் சின்னங்கள் மூலம் இந்துசமயம் தொன்மையானது சிறப்பானதென்று உறுதி செய்யப்பட்டது. இத்தகைய காலங்களை கடந்து நகர்ந்து வந்த இன்றைய நூற்றாண்டுகளில் விஞ்ஞானப் புதுமைகளில் கண்விழித்துக்கொண்ட அமெரிக்க நாஷா விஞ்ஞான ஆய்வுகூடம் இந்துமதம் தழுவிநிற்கும் உயர்வான நிலைப்பாடும் உலகின் இயற்கையான வடிவமைப்பும் ஒட்டுமொத்தமாக சிவ வடிவத்தையே ஒத்திருப்பதாக உறுதி செய்தார்கள்.

## செல்வம் கொழிக்கும்!

**பல்லவி**

ஆனை முகன் தம்பி ஆறுமுகன்! - தன்
அன்பர்க்கு அருள்தரும் அழகு முருகன்! (ஆனை)

**அனுபல்லவி**

ஞானம் தரும் எங்கள் குருநாதன்! - இந்த
ஞாலத்தை வலம் வந்த சிவபாலன்! (ஆனை)

**சரணம்**

கருணை முகத்தோடு காட்சி தருவான்! - என்றும்
கைவேலுடன் வந்து ஆட்சி புரிவான்!
வரும் வினைகள் யாவும் தீர்த்து வைப்பான்! - எங்கள்
வாழ்வுக்கு வழிகாட்டியாய் திகழ்வான்!
(ஆனை)

அவன் புகழ் பாடுவதில் அடைவேன் இன்பம்! - அவனை
அண்டித் தொழுதாலோ மறையும் துன்பம்!
சிவன் மகனால் எங்கள் வாழ்வு செழிக்கும்! - அந்தச்
சிங்கார வேலனால் செல்வம் கொழிக்கும்! (ஆனை)

- கி. குலசேகரன் -

*பணிவான சொல் பாதையை எளிமையாக்குகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# ஆனந்த சாகரம்

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள் –

## மார்கழி நோன்பு

### திருவெம்பாவை - திருப்பாவை

மாதங்களில் நான் மார்கழி என்ற கீதாச்சாரியனுக்குரிய மார்கழி மாதத்தை நாம் வரவேற்பது நமது கடமையாகும். அச்சுதன், அனந்தன் என்று போற்றும் பகவானின் பன்னிரு திருநாமங்கள் உயர்வானவை. கேசவா, நாராயணா, மாதவா, கோவிந்தா, விஷ்ணு, மதுசூதனா, திரிவிக்கிரமா, வாமனா, ஸ்ரீதரா, இருடிகேசா, பத்மநாபா, தாமோதரா என்பவை பன்னிரு திருநாமங்கள். மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் என்பது சூடிக்கொடுத்த சுடர்க்கொடி, ஆண்டாள் நாச்சியாரின் முதல்வாக்கு.

திருவெம்பாவையும், திருப்பாவையும் செந்நெறித் தமிழர்களுக்கு கிடைத்த தெய்வீக மணங்கமழும் தீந்தமிழ்ப் பூங்குவியல்கள். மாணிக்கவாசக சுவாமிகள் தன்னைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் கொண்டு அருளியதே திருவெம்பாவை. எத்திக்கும் புகழ் மணக்கும் தித்திக்கும் திருவெம்பாவை கற்றோரும் மற்றோரும் களிப்பருளும் களிப்பாய், உலகத்தவர் உவந்து போற்றும் பேற்றினைப் பெற்றது. மும்மலத்தின் முடிச்சறுக்கும் திருவெம்பாவை இன்பத் தமிழ் ஊற்று. மும்மலப் பிணியிலிருந்து மீளாத் துயிலில் ஆழ்ந்திருக்கும் கன்னிகளாகிய ஆன்மாக்களைத் துயிலெழுப்பி அம்மை அப்பனாய் சிவசக்தி சொரூபமாய் விளங்கும் இன்பப் பொய்கையில் மூழ்கி தோற்றமும், ஒடுக்கமுமற்ற, முதலும் முடிவுமற்ற, ஆதியும் அந்தமுமற்ற, அரும்பெரும் ஒளியில், அருட்பெரும் சோதியில் எம்மை இரண்டறக் கலக்கச் செய்கின்ற அருட்பெரும் அருந்தவ ஊற்றே தித்திக்கும் திருவெம்பாவைப் பாடல்களாகும்.

திருப்பாவை திருமாலின் திவ்விய புகழைப் பாடுகின்றது. ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணைகின்ற பெருந்தத்துவத்தை திருப்பாவையிலே பாடிக்கொண்டிருக்கிறாள் பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை கோதை. ஆண்டாள் தன் அன்புக் காதலின் மகத்துவத்தை குறிக்கோளை நிறைவேற்ற வேண்டி நோயற்ற நோன்பு பாவை நோன்பு. மனதினாலே ஸ்ரீ வில்லிபுத்தூரை ஆயர்பாடியாக்கினாள். தன்னையும் தன் தோழிகளையும் இடையர்குலப் பெண்களாகப் பாவித்தாள்.

மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில் தோழியரோடு நீராடப் புறப்படுகிறாள். திருத்துழாய்ச் செடியின் (துளசி) கீழ்த் தெய்வமலராகத் தோன்றிய பூமகள் கோதையாகிய ஆண்டாள். மானசீகமாகக் கண்ணனோடு கூடியிருந்து, மனங்குளிர, அவள் வாயிலிருந்து முப்பது பாசுரங்கள் புறப்படுகின்றன. அத்தனையும் உபநிடதத்தின் சாரமாய், முத்துக் குவிய லாய், பொன் சரமாய் பொழிகின்றன.

“கோதை பாடிய முப்பது பாசுரங்களையும் பாடிப் பயன் அடையாத மக்களை இப்பூமி எதற்காகச் சுமந்து கொண்டிருக்கிறதோ நாம் அறியோம்” என்று சொல்வது

*உன் அயலானை நேசி. ஆனால் வேலியை எடுத்துவிடாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பாவையைப் படிக்கவேண்டும் என்ற அறக்கட்டளையாகும். பக்தியின் சிகரத்தில் வாழ்ந்தவள் கோதை. கண்ணபிரானே! உன்னிடம் நாம் இரப்பவை பொன்னும் பொருளும் போகமும் அல்ல. தேவரீருடைய எவ்வவதாரங்களிலும், தேவரீருடைய உறவு உள்ளவர்களாகக் கடவோம். தேவரீருக்கே அடிமை செய்யக் கடவோம். எங்களுக்கு வேறு பொருட்களில் வரும் விருப்பங் களைத் தவிர்த்தருளும்" என்று வரம் வேண்டுகிறார்கள். இந்த அற்புதமான வேண்டுகோள் நம்முடைய பிரார்த்தனையாகவும் இருக்கவேண்டும். உலகப் பொருட்களிலுள்ள காமங்களை மாற்றவேண்டும் என்ற ஒரு நினைவு நமக்கு வருமேயானால் திருவடிப்பேற்றுக்குரிய செவ்வி வாய்க்கும்.

தேனிலுமினிய திருவாசகத்தைப் பாடித் தந்தவர் மாணிக்கவாசகப் பெருமான். திருப்பெருந்துறையிலே குருந்தமர நிழலிலே எம்பெருமானாகிய குருநாதரிடம் ஞானதீட்சை பெற்றபின் திருவண்ணாமலைத் தலத்தை அடைகிறார். அங்கே கன்னிப்பெண்கள் ஒன்றுகூடி மார்கழி மாதத்திலே தூய நீராடி ஈசன் புகழைப் பாடிப்பரவி நிற்கும் பாங்கினைக் கண்டு களித்து தன்னையும் ஒரு பெண்ணாகக் கற்பனைசெய்து அப்பக்தியின்பத்தைத் துய்க்கப் பாடியதே திருவெம்பாவையாகும். மார்கழி நீராடலின் தத்துவத்தை நோக்கில் மலமாகிய இருளிலே கிடந்து உழலாது திருவருளிலே படிந்து பரிபாகமடைதல் வேண்டும் என்பதாகும்.

இறை சக்தியாகிய திருவருள் கௌரி உருவம் ஆக்கப்பெற்று இந்நோன்பின்போது வழிபடப்படுகிறது. திருவெம்பாவை என்பது சக்தியை வியந்தது என்று பொருள்பெறும். மாய இருளில் அகப்பட்டு அஞ்ஞானத்துயில் கொள்ளும் மனிதனை நல்வழிப்படுத்துவது இறைவன் நாமமே. அந்த நாமத்தைக் கேட்டு அவன் அருள்பெறுங்கள் என்பதை மணிவாசகப் பெருந்தகை கன்னியர் துயில் எழுப்புவதை உவமானமாகக் காட்டி நம்மை வழிப்படுத்துகிறார்.

"அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கிவிட்டு விட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும்" என்கிறார் தாயுமானவர். இந்தப் பெண்களும் தங்கள் பணி யாவும் இறைவன் அன்பர்க்கே உரித்தாக வேண்டும் என வேண்டுகிறார்கள். சிவனடியாரோடு சேர்ந்து வாழ்கின்ற வாழ்வே பேரின்ப வாழ்வாகும். ஜீவாத்மாவும், பரமாத்மாவும் இணைகின்ற நிலையை திருவெம்பாவை விளக்குகிறது.

மாய இருளில் உழலும் நம்மை நல்வழிப்படுத்த மாணிக்கவாசகர் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காமல், விண்ணுக்கொரு மருந்தை, வேத விழுப்பொருளைக் கண்ணுக்கினியானைப் பாடிக் கசிந்துள்ளம் நெக்குருகி இறைவன் தெய்வீகத் தடாகமாகிய அருட்சுனையில் மூழ்கி எழுந்தால் நாம் போற்றி உயர்வதற்கு அருள் சுரக்கவல்ல தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைக் காணலாம் என்ற பேருண்மையைத் திருவெம்பாவைமூலம் விளக்கியுள்ளார். "பிறந்ததன் பயன் பிரானடி சேர்தலே"

நமது பற்றுக்களை ஒழிக்கவும், பழவினையின் தொடர்பை அறுக்கவும் பகவானுடைய நாம சங்கீர்த்தனம் வழிகாட்டும். முன்பு செய்த பாவங்களையும், இனிமேல் வரவிருக்கும் பாவங்களையும் நாம ஸங்கீர்த்தனம் தீயிலிட்ட பஞ்சுபோல் ஆக்கிவிடும்.

"மாயனை மன்னு வடமதுரை மைந்தனை" (திருப்பாவை)

*செழுமையில் கவனமும் ஏழ்மையில் பொறுமையும் தேவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து சிவசிந்தனையுடன் குளிர்ந்த நீரில் (சீதப்புனலாடி) நீராடி, சிவசின்னங்களணிந்து அடியார்களுடன் நகர சங்கீர்த்தனம், திருவீதிகளில் எம்பிரான் புகழ்பாடி ஆலயத்திற்குச் சென்று திருவெம்பாவையை ஓதல் வேண்டும். தில்லைச் சிதம்பரம் சென்று ஆதிரைநாள் தரிசனம் செய்ய ஏலாதவர்கள் உள்ளூர் நடராஜப் பெருமான் ஆலயங்களுக்குச் சென்று தரிசனம் செய்து இம்மை, மறுமை இன்பங்களைப் பெற்றுய்ய வேண்டும். நட்சத்திரங்களிலே திருவாதிரையும், திருவோணமும்தான் திரு என்ற சிறப்புப் பெற்றன. சிவனுக்கும், மகாவிஷ்ணுவுக்கும் உரிய நட்சத்திரங்கள். திருவெம்பாவை விரத நாளில் கடைசிநாளான திருவாதிரை நாளில் நடராஜப் பெருமானின் ஆடல் கண்டுகளித்து கூத்தப்பிரானின் திருவருளால் அவன் திருவடிகளை அடையவேண்டும்.

"மார்கழி மாதம் திருவாதிரை நாள் வரப்போகுது ஐயே
மனதைப் புண்ணாக்காமல் சித்தம்பரம் போக உத்தரம் தாரும் ஐயே"

என சிதம்பரம் போய் எம்பெருமான் திருநடனம் காண வேண்டித் தவித்து உருகுகின்றார் நந்தனார். நடராஜப் பெருமானும், சிவகாமசுந்தரி அம்பாளும் ஆடிவரும் திருநடனக் காட்சி காண ஆயிரம் கண்கள் வேண்டும்.

"போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்" ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இறைவன் அருள் சக்தியுடன் மண்ணுலகுக்கு எழுந்தருளுகின்றான். "புவனியில் போய்ப்பிறவாமல் நாள் நாம் போக்குகின்றோம் அவமே" என விண்ணகத்தவர் ஏங்குகின்றனர். அத்தனை சிறப்பு புவிக்குண்டு. அதுவும் மார்கழி மாத வழிபாடு மிகவும் சிறந்தது. கிருஷ்ணர் மாதங்களில் நான் மார்கழி என்றும், ஆண்டாள் "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளாம்" என்றும் மணிவாசகர் "மார்கழி நீராடேலோ ரெம்பாவாய்" என்றும் மார்கழி மாதச் சிறப்பினைச் சொல்கின்றனர். பிரம்ம முகூர்த்தம் கடவுள் வழிபாட்டிற்குரிய நேரம்.

நாமெல்லாம் சிவனருளால் முத்திபெறுவது உறுதி. எம்மோடு உடனாய் இருந்து எமது குறையகற்றி (கோதாட்டி) உயர்த்துகிறான். நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும் சிவனின் சீலத்தை எப்படிப் போற்றுவது! "தானே வந்து எம்மைத் தலையழித்து ஆட் கொண்டருளும் தலைவன்" அவன். திருவெம்பாவையில் கன்னியர்கள் எம் துணைவன், என்னரசன், இன்னமுதன் என்று உரிமை கொண்டாடி வணங்குகிறார்கள். அண்ணாமலையில் வீற்றிருக்கும் அவனை விண்ணகத் தேவர்களும் தம் முடி சாய்த்து வணங்குகிறார்கள். சிறப்புமிக்க இந்த மார்கழி மாதத்திலே பன்னிரு திருமுறைகளையும் திருக்காப்பிட்டு வைத்துவிட்டு திருவாசகம், திருவெம்பாவை மட்டுமே ஓதவேண்டும் என்பது நடைமுறையிலுள்ளது. மாதங்களில் நான் மார்கழி என்று மாதவன் சொன்னதும் மார்கழியில்தான். மார்கழியில்தான் மகாபாரத யுத்தமும் நடந்தது. அப்போதுதான் கீதையும் பிறந்தது. பதஞ்சலி, வியாக்ரபாதருக்கும் உமாபதி திருநடனக்காட்சி அளித்ததும் மார்கழித் திருவாதிரையில்தான். நாடிவரும் பக்தர்களுக்கு கோடி வரமருளும் ஆஞ்சநேய ஜெயந்தியும் மார்கழியில்தான். ஸ்ரீ ராம ஜெயம் எனும் தாரக மந்திரம் சொன்னவுடன் எம்மருகே வந்து எம்மை ஆட்கொள்ளும் அற்புதக் கடவுள் ஸ்ரீ ராம தூதன் ஆஞ்சநேயர்.

***உண்மையை நீ அழித்தால் அது உன்னையே அழித்துவிடும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியும், ஞானமும் கொண்ட சூடிக்கொடுத்த சுடர்க்கொடி கோதை பாவைபாடி மார்கழி நோன்பிருந்து அரங்கனை அடைந்தாள். உலக உயிர்களையும், இறைவனையும் ஆளும் திறமை பெற்றவராய் விளங்கியபடியால் ஆண்டாள் என்னும் திருநாமம் பெற்றாள். பாமாலையும், பூமாலையும் சூடிக்கொடுத்த கோதை பைந்தமிழ், தீந்தமிழ் திருப்பாவை பாடினார்.

மார்கழித் திங்களில் தேன் கலந்த வாசகம் தந்த வாதவூரரின் வண்ணத் திருவெம்பாவையும், பெரியாழ்வாரின் மகளாகிய தெய்வப்பெண் ஆண்டாளின் திருப்பாவையும் முழங்கவேண்டும். முழங்கினால் பெருமழை பொழியும். நங்கையர்கள் நல்ல கணவரைப் பெற்று எங்கள் பெருமானும், எம்பிராட்டியும் போன்று இசைந்து வாழலாம். நாடு செழிப்புறும். அறம் தளைக்கும்.

ஸ்ரீ வில்லிபுத்தூரில் பூமிப் பிராட்டியார் விஷ்ணு சித்தரின் மகளாக திருவாடிப் பூரத்தில் அவதரித்தார். சம்சாரக் கடலில் வீழ்ந்து நோவுபடும் நாம் உய்வதற்காக, கலியுகத்தில் எம்பெருமானின் நாமஸங்கீர்த்தனமே நாராயணனைப் பாடுவதே சுலபமான உபாயம் என பெருமான் சொல்ல, தானே ஆண்டாளாக அவதரித்து தாமருளிய திருப்பாவையில் பரமனடி பாடி, ஓங்கியுலகளந்த உத்தமன்பேர் பாடி, மாயனை மன்னு வடமதுரை மைந்தனைப் பாடி, நாராயண மூர்த்தி கேசவனைப் பாடி, சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கயக் கண்ணனைப் பாடி, மாயன் மாதவன், மணிவண்ணனைப் பாடி, மனதுக்கினியானை, ஆலினிலையானை, தேவாதி தேவனை, கம்சன் வயிற்றில் நெருப்பென நின்ற நெடுமாலை, குறையொன்றுமில்லாத கோவிந்தனை, வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை என்றெல்லாம் பாடி இதுவே நாம் உய்யும் வழி எனக் காட்டியிருக்கிறார். சீதை பெரிய பிராட்டியின் திருவவதாரம் கோதை பூமிப்பிராட்டியின் அவதாரம். இருவரும் மண்ணில் தோன்றியவர்கள்.

கீதை தந்தான் மாயவன்
கோதை தந்தாள் திருப்பாவை.

திருப்பாவை முப்பதும் படிக்க முடியாதவர்கள் "சிற்றம் சிறுகாலே" என்ற இந்தப் பாடலையாவது தினமும் ஓதி அவனருள் பெற வேண்டும்.

சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து நின்
பொற்றாமரை அடியேபோற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ
குற்றவேல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

அழுது அழுது அரனடி சேர்ந்தவர் மாணிக்கவாசக சுவாமிகள். மகத்தான பாடல்களைத் தந்த மணிவாசகரின் வரலாறு போராட்டங்கள் நிரம்பியது. அமைச்சராகப் பணியாற்றி உலக ஆசைகளை உதிர்த்து அழியாத் திருமுறை தந்தார். மாணிக்கவாசகர் என்ற பெயர் சிவபெருமானால் சூட்டப்பெற்றது. திருவாதவூரர் பெருந்துறைப்பிள்ளை, ஆளுடைய அடிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னவன் பிரம்மராயன் எனப் பல பெயர்கள். பேரின்ப வாழ்வை எண்ணி அவரது மனதுக்குள் ஞானாக்கினி கொழுந்துவிட்டெரிய ஒரு ஞானாசாரியரையே எதிர்நோக்கியிருந்தார். அங்கயற் கண்ணியை வணங்கி குதிரை வாங்கப் போகும்போது பாடிய பாடல்.

என்றார் வரை மயிலே!
ஏழ் பொழில் வாழ் கோகிலமே!
ஒன்றாய் வேதாகம வாலி ஓதிமமே!
பொன்றாத எண்ணெண்கலை பேசும் பூவையே!
மன்றார் கடம்பவனமானே! அடிபோற்றி!.

குருந்தமர நிழலிலே சிவபெருமானால் ஆட்கொள்ளப்பெற்று தேனிலுமினிய, கல்லையும் கரைய வைக்கும் திருவாசகத்தை நமக்குத் தந்தருளினார். எங்கள் மனோன்மணி அம்மன் ஆலயத்திலே திருவாதிரையன்று மணிவாசகரின் திருவுருவச்சிலையை மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தேரில் நகர்வலமாக அடியார்களின் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, நகர சங்கீர்த்தனதுடன் கோவிலை வந்தடைந்து பூஜைகள் நடைபெறும்.

இத்தகு மகிமையும், சிறப்பும் பொருந்திய மார்கழி நோன்பினை நோற்று மணிவாசகர் பாடிய கண்ணுக்கினியானைப் போற்றி, ஆண்டாள் பாடிய மனதுக்கினியானைப் பாடி எம்பெருமான் திருவருள் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. (தொடரும்...

---

## சுவாமி மோகனதாஸ் பெருமகனை உளம் நிறைந்து வாழ்த்துவோம் வாரீர்

அகவை எழுபத்துநான்கில் தாள் பதிக்கும் சந்நிதியான் ஆச்சிரம ஸ்தாபகர் சுவாமி மோகனதாஸ் அவர்கள் நற்கருணை உள்ளங்கொண்டு, இன மத வேறுபாடு கடந்து, தேசம் எங்கும் திரிந்து, சமுதாயப்பணி புரிந்துகொண்டிருக்கும் இப் பெரு மகனை வாழ்த்தும் சந்தர்ப்பம் கிடைத்தமையை நினைக்க நெஞ்சமெல்லாம் இனிக்கிறது.

ஞானதான வள்ளலாய், அன்னதான வேந்தனாய், யாழ் விருதுக்கு உகந்தவராய், கலாநிதியாய், சமாதான நீதிவானாய், பக்தி உணர்வை வளர்க்கும் ஞானச்சுடராய் பணி நிறை புரிய கூர்வேல் அழகன் சந்நிதியான் தொடர்ந்தும் துணை நிற்பான்.

செல்வக் கலாநிதியும் யாழ் விருதும் வென்றெடுத்து
எல்லையில்லாத் தொண்டாற்றும் ஸ்வாமிகள் - பல்லாண்டு
வாழ்ந்து நலிந்தோர் நலங்காக்க நெஞ்சுவந்து
வாழ்த்துவோம் வேலனடி வீழ்ந்து.

வாழ்க! வளர்க! இன்பமே சூழ்க.

-சி. சாந்தநாதன்-

காலம் வரும் என நினைத்து கடமையைக் கைவிடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துன்பம் நீங்க

*– திரு சிவ அன்பு* அவர்கள் –

உலகிலேயுள்ள உயிரினங்களிளெல்லாம் தலை சிறந்தவன் மனிதன். "அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவையாரும். இந்த மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம். ஆனால் ஒரே ஒரு விடயத்தில் மாத்திரம் சகலரும் ஒரேமாதிரித்தான். அது என்ன? "துன்பம் இல்லாமல் வாழவேண்டும்" என்பதில் சகலரும் ஒரே கருத்துடையவர்களாயுள்ளனர். ஆனால் அதற்கு வழி தெரியாமல் திண்டாடுகின்றனர். இதற்கு சுலபமான வழியை அருணகிரிநாதப் பெருமான் கூறியுள்ளார்.

ஒரு மனிதனுக்குத் துன்பம் இரு வகையாக வரும். ஒன்று மனத்தினால் வரும் துன்பம். மற்றொன்று உடலால் வரும் துன்பம். பசி, பிணி போன்றவை. உடல் நோயுற்றாலும் ஒருவன் மனத்தில் தென்பாக இருப்பானாயின் உற்சாகமாக, சுறுசுறுப்பாக இருப்பான். ஆகவே முதலில் மனத் துன்பத்திற்கு மருந்து கூறுகின்றார். சித்திக்கிலேன் என்றார். பல்வேறு உலகியல் எண்ணங்களில் மூழ்கித் துன்புறுகின்றோம். எண்ணங்கள் ஒன்றா? இரண்டா? ஓராயிரம்! பிறவிப் பிணிக்குக் காரணம் எமது ஆசையும் அதைச் சார்ந்த எண்ணங்களும்தானே.

திருக்கைலையிலே சுந்தரர் மலர் கொய்யும்போது ஒரு கணம் அநிந்திதை, கமலினி ஆகியோரைக் கண்டு மனம் தடுமாறினார். அதன் விளைவு பூலோகத்தில் வந்து சுந்தரமூர்த்தி நாயனாராகப் பிறந்தார். குபேரன் காயாவனம் என்கிற அழகிய ஸ்தலத்திலே சிறிது நாட்கள் தங்கவேண்டுமென்று எண்ணினான். அதற்காக ஒரு பிறவியே கிடைத்தது. பட்டினத்து அடிகளாக அவதரித்தார்.

"ஊரானந்தம் பெற்ற பேரானந்தம் சுற்றம் உறவானந்தம் உடலனந்தம் செய்யும் வினையனந்தம் வினையினால் கருத்தோ அனந்தம்" பிறப்புக்களைத் தவிர்க்க வேண்டுமானால் சிந்தனையை குறைக்கவேண்டும். "மனமே ஒன்றையும் நினைக்காதே" என்று நாம் கட்டளையிட்டால் அத் தருணம் பார்த்து அதிக எண்ண பேதங்கள் ஏற்படுகின்றன. ஆகவே பலப்பல எண்ணி அவதியுறும் மனத்தை இறைவன்பால் திருப்பிவிட்டால் அது சாந்தமுறும். "சிந்தனை நின்றனக்காக்கி" என்பார் மணிவாசகர். "சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்" சேரமான் பெருமாள் நாயனார். இறைவன் பற்று இறுக, இறுகப் பிற பற்றுக்கள் கழன்றுவிடும். தூங்கினவன் கைப்பொம்மை நழுவி விழுவதுபோல இறைவனை சிந்திக்க சிந்திக்க ஏனைய சிந்தனைகள் நீங்கும். அப்பேற்பட்ட சிந்தனைகளால் விளையும் தீய வினைகளும் நீங்கும். அதேபோல அந்த வினைகளால் விளையும் துன்பம் நீங்கப் பேரின்பம் ஊற்றெடுக்கும். ஆகவே வடிவேலிறைவனின் தண்டைச் சிற்றடியைச் சிந்தித்து எமக்கு மனத்தினால் விளையும் துன்பம் நீங்கி இன்பம் பெறுவோம்.

அதேபோல் உடம்பால் ஏற்படும் துன்பம் நீங்க வழியுண்டா என்றால் உண்டு என்கிறார் அருணகிரிநாதர். நின்று சேவிக்கிலேன் என்கிறார் இறைவனுக்குத் தொண்டுகள் செய்வது,

*உண்மை சொல்லிக் கெட்டாருமில்லை. பொய் சொல்லி வாழ்ந்தாருமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைகள் புரிவது உடலாற் செய்யும் சரியைத் தொண்டுகள். இதன்மூலம் உய்வு பெற்றார் திருநாவுக்கரசு நாயனார். நாம் அன்னதானம் செய்யும்போது எல்லோரிலும் இறைவனைக் கண்டு மகிழ்ந்து பூஜித்து வழங்குகின்றோம். அந்த அரிய சேவையில் எம் ஆணவம், அகங்காரம் எல்லாம் கரைந்து விடுகின்றது. ஆகவே சேவைகள் செய்வதன்மூலம் புண்ணியம் விளைகின்றது. நல்வினை சேர்கிறது. அதன் பயனாக உடல் துன்பங்கள் மறைகின்றன. இன்பம் அடைகிறோம். அவ்வாறாக உடல் துன்பமும் போக்கிவிடலாம் என்றார் அருணகிரிநாதர். முருகா புந்திக்கிலேச மும் காயக்கிலேசமும் போக்குதற்கே உன்னைச் சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன் நின் தண்டைச் சிற்றடியை வந்திக்கிலேன். வணங்குகின்ற முறை தெரியாது தடுமாறுகின்றோம். பூசை முறைகள் தெரியாத ஒருவன் பல முறைகளில் அந்த முருகன் புகழ்பாடி வாழ்த்தலாம் தானே. அதுவும் இயலாதவன் ஒவ்வொரு சந்தி பூசையிலும் சென்று அந்த முருகனைக் கண்குளிரக் காணலாம்தானே. சோம்பேறியாகத் தூங்கிவிட்டு பெருமைக்கு நாள் தவறாது ஆறுகாலப் பூசையிலும் கலந்து சிறப்புப்பெறுகிறேன் என்று பொய் பேசுகின்றனர் சிலர். இந்தப் பொய்யை நிந்திக்கலாம்தானே. உண்மையைச் சாதிக்கலாம்தானே.

இப்படி இத்தனை வழிகளையும் கூறி இவற்றை நாம் கடைப்பிடிக்க முயன்றால் முருகன் திருவருள் பெற்று எம் உடல் உள்ளம் ஆகியவற்றிற்கு ஏற்படும் துன்பத்தைப் போக்கலாம் என்பதை அருணகிரிநாத சுவாமி கீழ்வரும் கந்தரலங்காரத்தின்மூலம் வெகு சிறப்பாகவும் எளிமையாகவும் எமக்கு உபதேசித்தருளுகின்றார்.

சிந்திக் கிலேனின்று சேவிக்கி லேன்றண்டைச் சிற்றடியை
வந்திக் கிலேனென்றும் வாழ்த்துகிலேன் மயில் வாகனனைச்
சந்திக் கிலேன் பொய்யை நிந்திக்கி லேனுண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமுங் காயக் கிலேசமும் போக்குதற்கே.

புந்திக்கிலேசம் - மனோ வேதனை, காயக்கிலேசம் - உடலுக்கு வரும் பிணி முதலிய துன்பம் நீங்க அருணகிரியார் கூறும் வழிகள்.

1) எந்தை கந்தவேளைச் சிந்தித்தல்
2) அவனைச் சேவித்தல்
3) அவனை வணங்குதல்
4) அவனை வாழ்த்துதல்
5) அவனை கண்குளிரக் காண்பது
6) பொய்யை நிந்தித்தல்
7) சத்தியத்தை சாதித்தல்

இவற்றில் ஒன்றையாவது கடைப்பிடித்து உய்தி பெறுவோமாக.

---

எல்லா மதங்களின் சாரமும் ஒன்றே. இந்த உண்மையை யாருமே புரிந்து கொள்ளவில்லை. பலர் மதங்கள் வேறுபாடானவை என்று கருதிக்கொண்டு வாதப் பிரதிவாதம் செய்கிறார்கள். கிணற்றுத் தவளை கிணற்றையே பெரிதாகக் கருதும்.

*இல்லை என்கிற வீட்டில் பல்லியும் சேராது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 75

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 பற்றினை அறுத்தால்தான் பரமனடி கிட்டுமென்று
பொற்பதி முன்னால் நின்று பேருரை நிகழ்த்திவிட்டு
சற்றுமுன் சொன்னதெல்லாம் சபைக்கேதான் எனக்கன்றென்று
அற்பனுக்காசை கொள்வார் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

02 அர்ச்சனைத் தட்டமேந்தி அர்ச்சகர் கைக்கொடுத்து
ஆண்டவன் அடிக்கே இவைகள் அர்ப்பணம் என்றுவிட்டு
அர்ப்பணம் செய்ததட்டம் மாறியே வருதல் கண்டால்
இது எனதன்று வேறு என்போம் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

03 அந்தணம் தன்னைக் கூட்டிக் கடவுளாய் வணங்கி நின்று
தெப்பனம் பண்ணித்தாலி கட்டியே முடித்துவிட்டு
வந்தனம் செய்த ஐயர் வழியிலே வருதல்கண்டால்
சகுனமே பிழைத்த தென்போம் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

04 பத்துநாள் விரதம் காத்து பாலொடு பழங்களுண்டு
செத்தமீன் மாமிசத்தை சுத்தமாய் வெறுத்துவிட்டு
மெத்தவோர் கோயில்தேரும் தீர்த்தமும் முடிந்தபின்னால்
பித்தமாம் மச்சமுண்பார் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

05 எம்மோடு வரஇறைவன் விருப்புற்றால் வேண்டாமென்போம்
தன்னோடு வாவென்றிறைவன் அழைத்தாலும் மறுத்துவிட்டு
உன்னோடு எமக்குள் உறவு கோயிலில்தான் மட்டுமென்போம்
இறைபக்தி இதுதானென்றால் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

06 அகத்துன்பம் இறைக்குக் கூற புறச்சுத்தம் செய்துகொண்டு
புகலிடம் தேடியோடி ஆலயம் வந்துவிட்டு
மிகத்துன்பம் செய்வோம் ஊரார் சுகதுக்கம் அங்கேபேசி
மகத்துவம் இதுதானென்றால் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

*உடல் அமைதிபெற மனதை அமைதியாக வைத்துக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 பாலோடு பழங்களேந்தி பூச்சூடிப் புகழ்ந்துபாடி
சேவலும் மயிலும் போற்றி போற்றியென்று போற்றிவிட்டு
ஆவலால் பின்னோர்நாள் சேவலும் சமைத்து உண்போம்
கூவியபாடல் பொய்யோ இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

08 விநாயகப் பெருமானாரை விரும்பியே வணங்குதற்காய்
உள்ளதோர் வீட்டினுள்ளே உயரத்தில் வைக்கும்போது
தாண்டவக் கோலம் வேண்டாம் தவக்கோலம் போது மென்போம்
இறையிலும் குறையே கண்டால் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

09 முருகனைத் தேடி நாங்கள் முந்தியே வணங்குதற்காய்
இருகரம் ஏந்தியெங்கள் இல்லத்தே வைக்கும் போது
துணைவியர் வேண்டாம் முருகன் மட்டுமே போதுமென்போம்
இறையிலும் குறையே கண்டால் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

10 கண்ணனார் தன்னைக் காத்தல் தெய்வமாய்க் கருத்தில்கொண்டு
எம்மவரும் வீட்டினுள்ளே எழுந்தருள வைக்கும் போது
ஊதிடும் கண்ணன் வேண்டாம் சங்குசக்கரம் போதுமென்போம்
இறையிலும் குறையே கண்டால் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| **காசுக்கட்டளை** | **காசோலை** |
|---|---|
| செ. மோகனதாஸ் | செ. மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*அறிவுக்கு வேலி மௌனம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

இறைவன் மனிதனைப் படைத்து, வாழ வழிகளையும் வகுத்துள்ளான். பஞ்சமா பூதங்களையுடைய உடல்களைப் படைத்து, ஆறறிவையும் மனிதனுக்குக் கொடுத்துள்ளான். ஆனால் மனிதன் வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம் என்ற உண்மையை உணருகிறான் இல்லை. உடல் அழியாது என்று எண்ணி, தீய காரியங்களையும் செய்கின்றான். வினையை ஒழிப்பதற்கே இறைவன் எம்மை பூமியில் படைத்தான் என்ற உண்மையையும் உணருகிறான் இல்லை. மனிதனிடமுள்ள ஆணவமலம் தடுக்கின்றது. இதை நீக்கி மனிதன், தொண்டைமானாறு கலியுகவரதன் ஆலயம் சென்று வழிபட்டால், கடற்கரைக் கந்தன் அதைத் தீர்த்து வைப்பான் என்பது உண்மையில் உண்மை.

பூமியில் பிறந்த மனிதன் ஆறறிவினால், பஞ்சமா பாதகங்களை ஒழிக்க வழி காண்பான். இந்த உண்மையை நாயனார்

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக் கடல் பசிநோய் செய்த பழிதான்
தாழா அறம் செய்மின் கடன்கண்ணா மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக்கேதாரமனீரே.

என்ற பாடல்மூலம் அறிய வைக்கின்றார். பூமியில் மனிதன் வாழ்வது வினையொழியும் காலம்வரைதான் என்ற உண்மையை மனிதன் உணரவேண்டும். வாழப்பிறந்த மனிதன் தான தருமம் செய்யவேண்டும். தான தருமம் செய்வதற்கு இல்வாழ்க்கை சிறந்ததாகும். இல்லிலிருந்து மனைவி மக்களுடன் சந்தோசமாக வாழ வழி வகுத்துக்கொள்ள வேண்டும். "இல்வாழ்வான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை"யென வள்ளுவன் கூறுகின்றான். பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி ஆகிய மூவருக்கும் உணவு கொடுத்து வாழ வைக்கின்றான். கோவில்களையும், அறச்சாலைகளையும் மனிதன் கட்டி, உணவு அளித்து வாழ வைக்கின்றான்.

மனிதன் விஞ்ஞானத்துறையில் அளப்பெரும் சாதனைகளையும் புரிகின்றான். முன்பு பல மைல் தூரத்திலுள்ள மனிதனுடன் தொடர்புகொள்ள எவ்வளவு காலம் எடுத்தது. இப்பொழுது நொடிப்பொழுதில் கதைக்கின்றான். அவர்களின் உருவங்களையும் காணொளியில் பார்க்கின்றான். இப்பொழுது உலகம் மிகவும் சுருங்கி வீட்டினுள் வந்துவிட்டது. அதுமட்டுமன்றி எத்தனை கோள்களை விஞ்ஞானி கண்டு மனிதர்களுக்கு அறியவைக்கின்றான். எத்தனை அதிவேக விமானங்களையும் உலகை அழிக்கக்கூடிய குண்டுகளையும் மனிதன் கண்டு அஞ்சுகின்றான். நல்ல காரியம் செய்யப் படைத்த உடம்பு இன்று தீய காரியங்களையும்

*சேமிப்பு இல்லாத குடும்பம் கூரை இல்லாத வீட்டிற்குச் சமம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய ஆளாகியுள்ளது. மானுடப்பிறவி அரிது அரிது என்று ஔவைப்பிராட்டியார் அருளியுள்ளார். இந்த உண்மையை உணர மனிதனுக்கு இறைவன் அருளூட்ட வேண்டும்.

மனிதன் இறைவன் கொடுத்த உடம்பை நல்வழியில் செல்லவேண்டுமென அடியவர்களும், அறிஞர்களும், பெரியோர்களும் வேண்டுகின்றனர். இந்தப் பிறவியில் மனிதன் வினையை ஒழியாவிட்டால் மறு பிறவியில் ஐந்தறிவுள்ள ஒரு உயிரினமாகப் பிறக்கப்போகின்றோ என்ற உண்மையையும் அறியாதிருக்கின்றான். பூமியில் அவதரித்து நற்செயல்களை செய்து பெருபேறு பெற்ற அடியவர்களும், ஞானிகளும் பிறவிக் கடலைக் கடப்பார்கள். "பிறவிக் கடல் நீந்துவர், நீந்தார் இறைவனடி சேராதார்" என்று வள்ளுவன் பா மூலம் விளக்கியுள்ளார். இறையருள் பெற்று வள்ளுவன் பாடிய நூலை உலகம் தெய்வீக நூலென ஏற்றுள்ளது. வள்ளுவன் குறள் "கடுகைத் துளைத்து ஏழ்கடலை புகட்டி குறுகத் தறித்த குறள்" என ஓர் அறிஞன் புகழ்மாலை சூட்டுகின்றான். இக்குறள் இன்றும் என்றும் உள்ள குறளாக முக்காலத்துக்கும் உடைய குறளாக மிளிர்கின்றது. பெருமையும் புகழுமுடைய குறளாக, எல்லோரும் ஏற்கும் நூலாக திகழ்கின்றது. உலகம் ஊழிவரை அழியாது நிலைபெற்று நிற்குமென்று பேரறிஞர்கள் பகருகின்றனர். இந்நூலின் அருமை பெருமையை உணர்ந்து, உலகிலுள்ள வேற்று மொழியினர் அதிக மொழிகளில் மொழி பெயர்த்துள்ளனர்.

மனித காலச் சக்கரம் ஓடிக்கொண்டே இருக்கின்றது. உலக அதிசயங்களும் இதற்கு ஈடாக நாளுக்கு நாள் பன்மடங்கு பெருகிக்கொண்டே இருக்கின்றது. மனித வாழ்க்கையில் சமயங்களும் வாழ்க்கையை நெறிப்படுத்துகின்றன. இந்த உண்மையை உணராத சிலர் சமய வாதங்களில் ஈடுபட்டு மக்களின் நிம்மதியைக் கெடுக்கின்றனர். எல்லாச் சமயங்களும் இறைவனை அடைவதற்கு வழியைக் கூறுகின்றன. ஆனால் சைவசமயம் கல் தோன்றா மண் தோன்றாக் காலத்தில் தோன்றிய சமயம் என்று கூறுகின்றது. சைவசமயக் கடவுளை அப்பர் சுவாமிகள் கைலாயத் திருத்தாண்டகத்தில் "மூவாய் பிறவாய், இறவாய் போற்றி, முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி" எனக் கூறியுள்ளார். சமயங்கள் எதைக் கூறினாலும் "கடவுள் ஒருவன்" என்ற உண்மையோடு வாழ்ந்தால் போதும், வீண் விவாதங்கள் வேண்டாம். சைவசமயம் கூறுவதுபோல் "இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க" என்ற நாமத்தை மனதில் இருத்தி மனிதன் சந்தோசமாக வாழ இறைவன் அருள் புரிவாராக. வாழ்வாவது மாயம் என்ற உண்மையை மனிதன் என்றும் மனதில் இருத்தி சந்தோசமாக வாழ இறைவன் வழிவிடட்டும்.

## குருபூஜை தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| அக்டோ 12 | புர 25 | வியாழன் | அருணந்திசிவாச்சாரியார் |
| அக்டோ 28 | ஐப் 11 | சனி | திருமூலர் |
| நவம் 12 | ஐப் 26 | ஞாயிறு | மெய்கண்டதேவர் |

சொர்க்கமும் நரகமும் திருமணத்தில் தீர்மானிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி

**– கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்** அவர்கள் –

இந்துக்கள் பண்டிகைகள் பலவற்றைக் கொண்டாடி வருகின்றனர். பண்டிகைகள், விழாக்கள் கொண்டாடப்படுவதினால் வாழ்க்கையில் ஒரு வகை மகிழ்ச்சியும், தெம்பும், பற்றுதலும், உற்சாகமும் ஏற்படுகின்றன. அதனால் உடல், உள ஆரோக்கியம்; சமூக ஆரோக்கியம் மற்றும் நல்லுறவுகள் நன்கு பேணப்படுகின்றன. மனித வாழ்க்கை சீரும் சிறப்பும் பெறுவதோடு மனித உறவுகள் மேம்பாடடைகின்றன.

வாழ்க்கையில் சில மணிநேரமாவது, துன்பம் துயர்களை மறந்து; மகிழ்ச்சியாகக் குதூகலிக்கவும்; உற்றார் உறவினருடன் குடும்பசகிதம் உரையாடியும் உறவாடியும் மகிழவும் பண்டிகைகள் களம் அமைத்துத் தருகின்றன. ஆன்மீகச் சிந்தனைகள், தார்மீகப் பண்புகள் மனிதரில் எழுச்சியும் மலர்ச்சியும் பெற வாய்ப்புக்கள் நல்குகின்றன. மனிதன் மனிதத்தன்மைகளை விடாமல் கடைப்பிடிக்க வாய்ப்புக்கள் வழங்குகின்றன.

இந்துப் பண்டிகைகள் புராண வரலாறுகளை அடிப்படையாகக் கொண்டு வெற்றி விழாவாக அமைகின்றன. புராணச் செய்திகள் தேவர்கள் மற்றும் அசுரர்கள் ஆகியோருக் கிடையில் நடைபெற்ற போர்களை மையமாகக் கொண்டவை. அவை முறையே தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையே நடைபெறும் போராட்டங்களின் விவரணங்களாகவும் இறுதியில் தர்மம் வெல்லும், அதர்மம் தோல்வியடையும் என்னும் நீதியை நிலை நிறுத்துவதாகவும் விளங்குகின்றன.

## தீபாவளிப் பண்டிகை

வட இந்திய மக்கள் தீபாவளி தொடர்பாகக் கூறும் கதை பின்வருமாறு அமைகின்றது. இராமபிரான் வனவாசத்தை முடித்து; இராவண சங்காரத்தையும் நிகழ்த்தித் தர்மத்தை நிலைநாட்டியபின் வெற்றித் திருமகனாக சீதாப்பிராட்டியுடன் இலக்குவன் சகிதம் அயோத்தியை அடைந்த திருநாளில் மக்கள் பெருமகிழ்ச்சி ததும்ப தத்தம் இல்லங்களிலும் வீதிகளிலும் தீபங்களை வரிசையாக ஏற்றிவைத்து மகிழ்ச்சியைத் தெரிவித்து மாபெரும் வரவேற்பு அளித்தனர். அதன்பின் ஆண்டுதோறும் குறித்த அத் திருநாளை நினைவுகூரும் முகமாக தீபாவளியைக் கொண்டாடி வருகின்றனர். வட இந்திய மக்கள் இவ்வாறு தீபாவளியின் தோற்றத்தைக் குறிப்பிடுகின்றனர். தீபம் + ஆவளி = தீபாவளி. தீபங்களின் வரிசை என்பது அதன் பொருள்.

தென்னிந்தியா, இலங்கை ஆகிய பிரதேசங்களில் வதியும் இந்துக்கள் தீபாவளி தொடர்பாக நரகாசுரன் கதையைக் கூறுகின்றனர். மகாவிஷ்ணுவின் அவதாரங்களுள் வராக (பன்றி) அவதாரமும் ஒன்று. அவ்வேளை பூமாதேவியை மணந்து பெற்ற பிள்ளை நரகாசுரன் ஆகும். நரகாசுரன் இறைவனை நோக்கிக் கடுந்தவம் செய்து வரங்கள் பலவற்றைப் பெற்றான். வரங்கள் அவனுக்கு வல்லமைகளை வழங்கின. வல்லமைகள் "நான்", "எனது" என்னும்

*சோற்றுக்கும் கறுப்புண்டு சொல்லுக்கும் பழுதுண்டு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகங்கார, மமகாரங்களை அவனுக்கு வாரி இறைத்தன. கொடுங்கோலனாக மாறினான். நல்லவர்கள் சிறைப்படுத்தப்பட்டுக் கொடுமைக்குள்ளாக்கப்பட்டனர்.

வரங்கள் வழங்கிய இறைவனையும் மறந்தான். "நானே பிரம்மம்" என ஆர்ப்பரித்தான். நன்றி மறத்தல் அசுரக்குணம். ஆலயங்களில் விளக்கேற்றவும்; நித்திய நைமித்தியப் பூசை ஆராதனைகள் நடைபெறுவதற்கும் தடை விதித்தான். எங்கும் இருள் மயம். மக்கள் பெருந் துன்பங்களை அனுபவித்தனர்.

மகாவிஷ்ணு கிருஷ்ணாவதாரம் எடுத்தபோது, மக்கள் துவாரகைக்குச் சென்று, நரகாசுரனின் கொடுங்கோன்மை பற்றிப் பகவானிடம் முறையிட்டனர். மக்களைப் பாதுகாக்க கண்ணபிரான் திருவுளங்கொண்டார்.

நரகாசுரனைப் பகலிலோ இரவிலோ கொல்லமுடியாது. அவன் பெற்ற வரம் அத்தகையது. மாய வித்தைகளிலும் சிறந்தவன். இம் மாயங்கள், மாயக் கண்ணனிடம் பலிக்காது. கிருஷ்ண பகவான், இரவும் பகலுமற்ற இரண்டும் கெட்ட நேரத்தில் சத்தியபாமா தேரைச் செலுத்தப் போருக்குப் புறப்பட்டுச் சென்று, நரகாசுரனைச் சங்காரம் செய்தார். பொழுது சாயுங்காலம் என்று இக்கால வேளையை அழைப்பர். வீட்டில் விளக்கேற்றி இறைவனைப் பிரார்த்திக்கும் நேரம். இந்நேர வேளையில் உணவு உண்பதோ, உறங்குவதோ, வேறு சுபகாரியங்களில் ஈடுபடுவதோ தவிர்க்கப்பட வேண்டும். இரணியனைக் கொன்ற நேரம் என்றும், நரகாசுரனைக் கொன்ற நேரம் என்றும், இரண்டும் கெட்டான் நேரம் என்றும் இவ்வேளையைப் பெரியோர் கூறுவர்.

நரகாசுரன் இறக்கும் அந்திம வேளையில் அவனுக்கு சிறிது நேரம் ஞானோதயம் ஏற்பட்டது. அந்நிலைமை ஏற்படுவதற்கும் பகவானின் மறக்கருணையே காரணம். நரகாசுரன் தான் மக்களுக்கு இழைத்த கொடுமைகளை எண்ணி மனம் வருந்தினான். தவறுகளை உணர்ந்து கொண்டான். இறுதிக்கட்டத்தில் உயிர் பிரியும் நேரம் கண்ணபிரானைத் தொழுது வணங்கி, ஒரு வரம் வேண்டினான்.

"ஐயனே! எனது குற்றங்களுக்கு எனக்குக் கிடைத்த தண்டனை நீதியானதே என்பதை நான் உணர்ந்து கொண்டேன். மரணத்தை ஏற்கச் சித்தமாயுள்ளேன். இந்நேரத்தில் எனது ஒரேயொரு வேண்டுதலை வரமாக எனக்கு வழங்கி அருளவேண்டும்" என்று பகவானை இரந்து நின்றான்.

**நரகாசுரனின் கோரிக்கை பின்வருமாறு:**

"நான் பிழைகளை உணர்ந்து, மரணத்தைத் தழுவிக்கொண்ட இந்த நாளில் ஒவ்வோர் ஆண்டும் உலகத்தவர் என்னை நினைவுகொள்ளும் வகையில் வரம் அருள வேண்டும்" என்பதே அக் கோரிக்கையாகும்.

கிருஷ்ண பகவான், நரகாசுரனை பார்த்து, "நீ மரணிக்கும் இச் சதுர்த்தசி நாள் இனிவரும் ஒவ்வோர் ஆண்டும், நரக சதுர்த்தசி என்று அழைக்கப்பெறும். அன்றைய தினம் தீபங்கள் பல வரிசையாக ஏற்றி, மக்கள் ஒளி வழிபாடு செய்வர். அதனால் உன் நினைவு

*தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறுதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நிலவுலகில் நிலைபெறும். அத்தினத்தில் விடிய ஐந்து நாழிகைக்கு முன் துயிலெழுந்து; அரப்பு, எண்ணெய் சிரசில் தேய்த்து; நீராடிப் புத்தாடை அணிந்து எம்மை வழிபடுபவர்களுக்குக் கங்கையில் ஸ்நானம் செய்தால் கிடைக்கக்கூடிய புண்ணிய பலனை வரம் ஆக வழங்குகிறேன். அந்த வகையில் உன் நினைவினை ஆண்டுக்கு ஒருமுறை மக்கள் கொண்டாடி மகிழ்வர்" என கிருஷ்ண பரமாத்மா திருவாய் மலர்ந்தருளினார். நரகாசுரனும் மனநிறைவுடன் உயிர் நீத்தான். மக்களும் மகிழ்ந்தனர்.

இறைவனின் இத்தகைய அருள் செயல்களை "துஷ்ட நிக்கிரக, சிஷ்ட பரிபாலனம்" என நூல்கள் கூறுகின்றன.

அதேவேளை நரகாசுரனின் தாயாகிய பூமாதேவியும் கிருஷ்ண பகவானிடம் ஒரு வரம் வேண்டி நின்றாள். "வேண்டுவார் வேண்டுவதை ஈய்பவன்" இறைவன். தனது மகன் நரகாசுரன் இறந்த இத்தினத்தில் ஆண்டுதோறும் மக்கள் ஆயிரம் விளக்குகள் ஏற்றி, உலகில் ஒளி பெருக்க வேண்டும் என்பதே அந்த வரம். அதனையும் பகவான் வழங்கினார். பூமாதேவியும் மனம் மகிழ்ந்தாள்.

இறைவன் அறக்கருணை, மறக்கருணை ஆகிய இரண்டையும் பெறுபவரின் தகுதி அறிந்து வழங்கும் நீதிமான். அதனால் இறைவன் கருணாமூர்த்தி என்றும் கருணாநிதியென்றும் கருணைக்கடல் என்றும் போற்றப்படுகிறான். சகலருக்கும் சுகம் செய்பவன் என்பதால் இறைவன் சங்கரன் என அழைக்கப்படுகிறான். வெகுமதி, தண்டனை இரண்டையும் வரிசையறிந்து இறைவன் வழங்குவது; பெறுநர்கள்மீது இறைவன் கொண்டுள்ள அளப்பருங் கருணையினாலேயேயாகும் என்பதை நாம் கருத்தில்கொள்ள வேண்டும்.

தீபாவளி - வெற்றித் திருநாள்; இறைவனின் திருவருட் துணையுடன் கொண்டாடி மகிழவேண்டிய பெருநாள். அறியாமை இருள் அகன்ற நன்நாள். இறைவனுக்கு நன்றி சொல்லவேண்டிய அற்புதநாள். அப்படிப்பட்ட அருட்திறன் வாய்ந்த புனித தினத்தை குடும்பத்தவர்கள், நண்பர்கள், உறவினர் சகிதம் கொண்டாடி களிப்புற வேண்டுமே தவிர, மது, மாமிச உணவுகள் என்பவற்றை அருந்தியும் துய்த்தும், தகாத செயல்களில் ஈடுபட்டும் கொச்சைப்படுத்தல் ஆகாது. இறைவனை முன் வைத்து ஒழுக்கம் தவறாமல், ஆன்மிக உணர்வுடன் செயற்படவேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ளுதல் இன்றியமையாத மனித தர்மம் ஆகும். குளிக்கப்போய் சேறு பூசிக்கொள்ளுதல் ஆகாது அல்லவா?

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

-திருக்குறள் 131.

ஒழுக்கமே எல்லோர்க்கும் மேன்மையைத் தருவதால், அந்த ஒழுக்கமே உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்படுகிறது.

இந்துப் பண்டிகைகள் சைவ முறைப்படி சமய ஆசாரங்களுடன் கொண்டாடப்பட வேண்டியன. அவை சமய நோக்கு, சமூக நோக்கு ஆகிய இரண்டையும் கொண்டுள்ளன. சமய நோக்கில் பெரிதும் இடம்பெறுவன. ஆலய வழிபாடு, பூசை ஆராதனைகள், திருவிழாக்கள்

*விருப்பத்தினால் ஆகாதது விரும்பினால் ஆகாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றில் கலந்துகொள்ளல், வேண்டுதல்களை இறைவனிடம் சமர்ப்பித்தல், அவை நிறைவுபெறும்போது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுதல், நன்றி சொல்லல் முதலியன இறைபக்திக்கு முதன்மை வழங்கப்படுகிறது. சரியை வழிபாடு, பக்தி மார்க்கம் ஆகியவற்றைக் கடைப்பிடித்தல் அன்றைய தினம் முக்கியத்துவம் பெறுகின்றன. அசைவ உணவுகள், போதையூட்டும் குடிவகைகள் ஆகியன முற்றிலாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

பண்டிகைகளின் சமூகநோக்கில் இடம்பெறுவன. ஈகை எனும் பண்பாட்டை விளக்கம் பெறச் செய்தல் "ஈகைத் திருநாள்" ஆக விளங்கச் செய்தல் "ஈதல் அறம்" என்பது பழமொழி. "ஈவது விளக்கேல்" என்பது ஔவை மொழி. "ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்றும் தாம் தேடிய பொருள்களில் ஒரு பங்கினை ஈதல் செய்தல் வேண்டும் என்றும் அப் பழமொழிகள் உணர்த்துகின்றன. இந்துப் பண்டிகைகள் அத்தகைய சமூக நோக்குகளை நிறைவேற்ற வாய்ப்புக்களை வழங்குவனவாகவும் விளங்குகின்றன.

பகிர்ந்துண்ணல்; பல்லுயிர் ஓம்புதல்; பகைமை ஒழித்தல்; நட்புறவு பேணுதல்; பெரியோரை மதித்து மரியாதை செய்தல்; பெற்றோர், குரு, ஆசிரியர், மூத்தோர் மூத்த உடன் பிறந்தோர் ஆகியோரை வணங்கி ஆசி பெறுதல் என்பன பண்டிகைகள் காலத்தில் முக்கியமாக இடம்பெறுகின்றன. ஆயினும் அவற்றை எஞ்ஞான்றும் தொடர்ந்து கடைப்பிடித்து வருதல்; குடும்ப உறவு, சமூக உறவு, நட்புறவு ஆகியனவற்றின் ஸ்திரத் தன்மைக்கும் மேம்பாட்டுக்கும்; உரமும் உறுதியும் தருகின்றன. தீபாவளி அந்தவகையில் ஓர் ஒற்றுமைத் திருநாள் ஆகவும் விளங்குகின்றது. இவை அவற்றின் சமூக நோக்கில் அடங்குவன.

(தொடரும்...

## ஆலய பிரசாதத்தின் மகிமை

கடவுளுக்குப் படைக்க, எல்லா உயிர்களுமே தம்மால் இயன்றதை அளிக்கின்றன. தாவரங்கள் மலர், பழம் ஆகியவற்றைக் கொடுக்கின்றன. பால், தயிர், நெய் போன்றவற்றை விலங்கினங்கள் கொடுக்கின்றன. சமைத்த உணவையும், பலகாரங்களையும் மனிதன் தயாரித்து அளிக்கின்றான். கடவுளின் பெயரால் ஆலயத்துக்கு வந்துசேரும் இந்தப் பொருட்கள் பிரசாதமாக எல்லோருக்கும் பகுத்துக் கொடுக்கப்படுகின்றது. எதைக் கொடுத்தாலும் நாம் கொடுத்தமைக்காக பெருமைப்படுகின்றோம். ஆனால் இறைவனுக்குப் படைத்து அதையே பிரசாதமாகப் பெற்று எல்லோருக்கும் அளிக்கும்போது அத்தகைய தற்பெருமை ஏற்படுவதில்லை. பிறரிடம் ஏற்பதும் பெறுவதும் ஒருவருக்கு குறிப்பாக மேல் நிலையில் உள்ளவர்கள் இகழ்ச்சி என கருதப்படுகின்றது. ஆனால் பிரசாதமாக பெறுவதில் இத்தகைய இகழ்ச்சி என்ற மனப்பான்மை ஏற்படுவதில்லை. காரணம் அது கடவுளின் பிரசாதம் என்றாகிறது. அடக்கம், பணிவு, சமத்துவம் ஆகிய நல்லுணர்வுகள் உண்டாக்க கோவில் பிரசாதம் முக்கியத்துவம் பெறுகிறது என்றால் அதன் மகத்துவத்தை கூற வார்த்தைகள் இல்லை எனக் கூறலாம்.

-இந்து தர்ம சாஸ்திரம்-

*வாயும் கையும் சுத்தமாக இருந்தால் உலகம் முழுவதும் செல்லலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் மதங்களும்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

அன்பு என்பது இன்பமானது, ஈரமானது, மனதுக்கு இதமானது. அன்பை ஒருவரோடு பகிரும்போது அது பெருகும். அன்பை ஒருவருக்கு நாம் காட்டும்போது அன்பைக் காட்டுபவரும் மகிழ்ச்சி அடைகின்றார். அன்பைப் பெறுபவரும் இன்பம் அடைகின்றார். அத்தகைய சிறப்பும் தனித்துவமும் கொண்ட அன்பு தெய்வீகமானது. அதன் சிறப்பு சொல்லில் அடங்காது. அன்பே சிவம்.

மேலும், மதங்கள், மார்க்கங்கள், சமயங்கள் என்று சொல்லப்படுகின்றபோது மதம் எதுவாக இருந்தாலும், அவை யாவும் அன்பின் வழி அமையப்பெற்றவையே. இந்து மதத்தை எடுத்துக்கொண்டால் அன்பே சிவம் என்கிறது சைவம். உயிர்கள் மேல் அன்பு காட்டும் அஹிம்சை, ஜீவகாருண்யம் ஆகியவற்றை வலியுறுத்துகின்றது பௌத்தம். ஈ, எறும்பு போன்ற சின்னஞ்சிறு உயிரினங்களை மிதித்தல் கூட பாவ காரியம் என்கிறது சமணம். உயிர்கள்மேல் கொண்ட அன்பின் காரணமாக அவர்களது பாவத்தை, சிலுவை வடிவில் சுமந்தது கிறிஸ்தவம். சமண சமயத்தின் உயிர்மூச்சே அன்புதான். நிம்மதிக்காக ஒரு ஆட்டுக்குட்டியின் சந்தோஷத் திற்காக, பிம்பிசார மன்னனோடு வாதாடியவர் புத்தர் பிரான். தாய் ஆட்டைப் பிரிந்து தாய்ப் பாசத்திற்காக ஏங்கிய ஆட்டுக்குட்டி ஒன்றை சந்திக்கின்றார் புத்தபிரான். பிம்பிசார மன்னன், அக்குட்டியின் தாய் ஆட்டை பலிகொடுக்க தயார் செய்ததை அறிகின்றார் அவர். பல நியாயங்களை எடுத்துக்காட்டி, தாய் ஆட்டை பலியிடுவதிலிருந்து காப்பாற்றி தாயையும் சேயையும் ஒன்று சேர்த்து வைக்கின்றார். இது அன்பின் சிகரம். அன்புபற்றி திருமூலர் கூறுகையில் அன்பும் சிவமும் ஒன்றுதான் என்கிறார். இறைவன், உயிர்களிடத்தில் கொண்ட கருணை காரணமாக புரிந்த திருவிளையாடல்கள் பல. தாய்ப்பன்றி ஒன்று இறந்துபோக, அதன் குட்டிகள் பட்ட துயரைக் கண்டு, எம்பெருமானே தாய்ப்பன்றி வடிவமெடுத்து அக் குட்டிகளுக்குப் பாலூட்டி அவர்களைக் காப்பாற்றிய வரலாறு யாம் அறிந்ததே.

இந்த வகையில் மதங்கள் எல்லாம் அன்பை அடிப்படையாக வைத்து தமது செயற்பாடுகளை அமைத்து எமக்கு வழிகாட்டி வருகின்றன.

இனி வள்ளுவர் அன்பின் அவசியம் பற்றி வலியுறுத்தும் விதத்தை நோக்குவோம்.

“அன்பின் வழியது உயிர் நிலை அ∴திலார்
என்பு தோல் போர்த்த உடம்பு”

என்ற இந்த ஒரு குறளே போதும் மனித வாழ்வில் அன்பின் அவசியத்தை தெளிவாக எடுத்துக் காட்டுவதற்கு. மனிதன் ஒருவனிடம் அன்பு காட்டும் சக்தி இல்லையேல் அவன் மனிதன் அல்லன் அவன் வெறும் தோலால் போர்க்கப்பெற்ற ஒரு எலும்புக்கூடு என்கின்றது இக் குறட்பா. அன்புடையவர்கள் எல்லோர்க்குமே உரியவர்கள். அன்பு என்பது நெஞ்சத்தில் இல்லாதவர் தமக்கும் உதவார் பிறர்க்கும் உதவார்.

*ஒரு குழந்தைக்கு தாய் இருக்கும் இடம்தான் சொர்க்கம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனிடத்திலே இருக்கும் அன்புதான் மனிதனிடத்தில் அன்பாகப் பரிணமிக்கின்றது. அன்பு, பக்தி ஆகின்றது. தாயின் அன்பு இல்லாதவர் வாழ்வில் இன்பத்திற்கு இடம் ஏது? அவர்கள் வாழ்வு சோபிக்காது. கருணையும் அன்பும் இரக்கமும் ஒருவனது வாழ்க்கையின் அத்திவாரமாக அமையவேண்டும். அவையே அணிகலன்களாகவும் துலங்க வேண்டும்.

எனவே மதங்களை, மார்க்கங்களை, சமயங்களை பெருமதிப்போடு நோக்கும் நாம், அன்பின் வழி நடக்க முயலவேண்டும். நடந்து காட்டவும் வேண்டும். இதுவே உண்மை. வாழ்வுக்கு வெற்றி தரும் வழி இது. முயன்று பார்ப்போமே...

---

## பாதுகை

ராமர் வனவாசம் செய்தபோது பரதனும் சத்துருக்கனும் அவரது பாதுகையை 14 ஆண்டு காலம் பூஜித்தனர். இதற்கு ஒரு காரணம் உண்டு.

வைகுண்டத்தில் ஒருநாள் திருமால் வழக்கத்துக்கு மாறாக பாதுகையை பள்ளியறைக்குள் விடுத்து பாம்பணையில் படுத்தார். பெருமானுடைய திருமுடிக்கு சீற்றம் உண்டாயிற்று. முடி "ஏ பாதுகையே! உனக்கு அறிவு இருக்கின்றதா கண்ட இடமெல்லாம் மிதிக்கின்ற நீ படுக்கை அறைக்குள் வரலாமா? போ வெளியே" என்றது.

பாதுகை, முடியே நானே வரவில்லை. பகவானுடைய திருவடிகள் என்னை உள்ளே விட்டது. வீணாக என்மீது ஏன் கோவிக்கின்றாய்?" என்றது.

"பாதுகையே அதிகம் பேசாதே. நான் பெருமானுடைய தலைக்குமேல் இருக்கும் தகுதி உடையவன். என்னுடன் பேசவும் உனக்கு யோக்கியதை கிடையாது. ஆதலினால் சீக்கிரம் போ போ" என்றது.

"முடியே ஏன் வீண் பெருமை பேசுகின்றாய். ஐயன் பாதத்தை நம்பினோர் நலம் பெறுவர். அடியார்கள் அனைவரும் அடியைத்தானே விரும்புகின்றார்கள். எனவே என்னை இகழாதே.

சங்கும் சக்கரமும் திருமுடியின் பக்கம் சேர்ந்து "ஏய் செருப்பே உனக்கென்ன அதிகம் வாய். உன்னை நசுக்கி எறிவோம் வாயை மூடிக்கொண்டு வெளியே போ" என்றன.

பாதுகை நாராயணரைப் பார்த்து, "கருணைக்கடலே! நீர் என்னை உள்ளே விடுத்து இவர்களைக் கொண்டு இகழச் செய்வது முறையா" என்று முறையிட்டது.

திருமால், "பாதுகையே நீர் வருந்தற்க" என்று கூறிவிட்டு பின்னர் முடியைப் பார்த்து "முடியே நீ தற்பெருமை பேசி பாதுகையை நிந்தித்தபடியால் அடுத்துவரும் ராம அவதாரத்தில் 14 வருடங்கள் இப் பாதுகையின்மீது இருக்கக் கடவது. சங்கே சக்கரமே நீவிர் பாதுகையை இகழ்ந்தபடியால் ராம அவதாரத்தில் பரதன் ஆகவும், சத்துருக்கன் ஆகவும் பிறந்து இப் பாதுகையை 14 ஆண்டுகள் வழிபடக் கடவது என்றார்". அப்படியே நிகழ்ந்தது.

*நிழலின் அருமை வெயிலில் போனால் தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

அத்தியாயம் – 10 (தொடர்ச்சி...

# தியாகத்தின் வகைகளும் மன ஒருமைப்பாடும்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

## 07) ஒரேமாதிரிச் சிந்தனை

பிரகிருதிச் சக்தியே சத்துவம், இராசதம், தாமசம் என்பனவாகத் தோன்றுகின்றது. அந்த நேரத்தில் நாம் எதையாவது செய்கிறோம் என்று உணர்வதில்லை. அது நாம் ஒரு வாகனத்துள் உட்கார்ந்து கொண்டிருக்க அது செல்லும்போது அதனுடைய இயக்கத்துக்கு நாம் எவ்வித பங்களிப்பும் செய்யாது இருப்பது போலாகும். அந்த வாகன இயக்கத்தின் சக்தியால்தான் நாம் எடுத்துச் செல்லப்பெறுகின்றோம். இதனை அனுபவிப்பதற்கு மனதுக்கு மிகவும் கடினமாக இருக்கும். ஏனெனில் எந்த மனிதனுக்கும் இவ்விதமாகச் சிந்திக்கும் வழக்கம் இல்லை. நாம் எல்லோரும் ஒரேமாதிரியாகவே சிந்திக்கின்றோம். அதுவே வாழ்க்கையின் மரபுரீதியான நடப்பு ஆகும். அந்த வாழ்க்கையின் அடிப்படை சுய விருப்பமும், தன்னைச் சார்ந்ததும், பொருள்களை மையமாகக் கொண்டதும், பௌதீக ரீதியானதும், முழுச்சூழ்நிலையில் இருந்தும் விலகித் தனிமையில் வேரூன்றியதாகவும் இருக்கும். கீதையின் ஐந்தாம் அத்தியாயத் தின் இறுதியில் இரண்டு சுலோகங்களில் யோகப்பயிற்சியின் மிக முக்கியமான விடயம் கூறப்பெற்றிருக்கிறது. அந்த விடயமே ஆறாவது அத்தியாயத்தில் மிக விவரமாகக் கூறப்பெறுகின்றது.

## 08) முதலாவது அறிவுரை

வெளியே உள்ள பொருள்களோடு புலன்களினது தொடர்பு துண்டிக்கப்பட வேண்டும். இதுவே முதலாவது அறிவுரை ஆகும். இந்தக் கூற்றின் பொருளைப் புரிந்துகொள்வதில் நாம் பெரும்பாலும் தவறு செய்கின்றோம். புலன்களோடு தமது தொடர்பில் இருந்தும் பொருள்கள் துண்டிக்கப்பட வேண்டும். பொதுவாக இந்த ஆலோசனையினால் நாம் பொருள்களில் இருந்து பௌதீக ரீதியாகத் தப்பி ஓடவேண்டும் என்றே நினைக்கின்றோம். அதாவது புவியியல் ரீதியாக பொருள்கள் இருக்கும் இடத்தில் இருந்து வேறோர் இடத்துக்கு ஓர் அசைவைச் செய்யவேண்டும் என்றும் நினைக்கின்றோம். அதாவது அந்தப் பொருள்கள் இல்லாத வேறு இடத்துக்கு நாம் போவதற்காக அசைய வேண்டும். இதுதான் தியாக வடிவங்களில் மிகவும் செம்மையில்லாத கீழான வடிவமாகும். கீதையின் இரண்டாவது அத்தியாயத்தின் ஓர் இடத்தில் (2:58) பொருள்களுக்கான ஆசை இல்லாமைக்குப் பௌதிகரீதியாகத் தனிமையாதல் அவசியமில்லை என நாம் எச்சரிக்கப்பெறுகின்றோம். பௌதிக ரீதியாக உடம்புக்கும் பொருள் களுக்கும் இடையே தூரம் இருந்தாலும், மனம்தான் நினைக்கும் அப்பொருள்களில் இருந்து தன்னை விலக்கிக்கொள்ளாது போகலாம்.

*ஒருவனுடைய மனைவி சொர்க்கத்தின் விசித்திரமான பரிசு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09) எச்சரிக்கை

புலன்களை அவற்றின் காட்சியில் இருந்து துண்டிப்பது என்பதன் பொருள் இந்தச் சந்தர்ப்பத்தில் எமக்கும் பொருள்களுக்கும் இடையே பௌதிக ரீதியாக ஒரு தூரத்தைப் பேணாது, புறநிலையின் பிடிகளில் இருந்து எமது பிரக்ஞையை விலக்கி அப்பொருள்கள் உண்மையில் புறத்தே வைக்கப்பட்டிருக்கவில்லை என்னும் அனுபவத்திற்கு அல்லது உணர்வுக்கு வருவதாகும். மீண்டும் கீதையின் மூன்றாம் அத்தியாயத்துக்குத் திரும்பினால் பொருள்கள் காலம் - இடம் என்பவற்றில் புறத்தே வைக்கப்பட்டிருக்கவில்லை என்று எமது இருப்பின் அடிப்படையில் நாம் நம்பிக்கை வைக்கவேண்டும். இது மனிதனுடைய பிழையான நோக்காகும். அப்பொருள் உண்மையில் எமக்கு வெளியே இல்லை எனில் அவற்றோடு எவ்விதமான புலன் தொடர்பும் இருக்கமுடியாது. எனவே அத்துடன் அப்பொருள்களுக்கான ஆசைபற்றிய பிரச்சினையும் இருக்கமுடியாது. எல்லாமே ஓர் அடியில் விழுந்து விடுகிறது. இதுதான் உண்மையான தியாகம் ஆகும். அத்துடன் இதுதான் நிலையானது. புலன்களைப் புலன் பொருள்களிலிருந்து துண்டிக்க வேண்டும் என்ற எச்சரிக்கையும் இதுதான்.

## 10) மனதின் இருப்பிடம்

மனம் இருக்கின்ற மையத்தில் பார்வை அல்லது கவனம் நிலை நிறுத்தப்பட வேண்டும். இது ஒருசிறு அறிவுறுத்தலாகும். மனதுக்கு ஓர் குறிப்பிட்ட இடம் இருக்கிறது என்பதை மறைஞான உளவியல் ஏற்றுக்கொள்ளுகிறது. நனவு அல்லது விழிப்பு நிலையில் மனம் மூளை ஊடாகத் தொழிற்படுகிறது எனக் கருதப்பெறுகிறது. அப்போது அதன் இருப்பிடம் இரு புருவங்களுக்கும் மத்தியில் உள்ளது எனக்கொள்ளப்பெறுகிறது. கனவு நிலையின் மனம் கழுத்திலுள்ள நரம்பு மையத்தின் ஊடாக அல்லது கழுத்துப் பகுதியில் அசைவதாகக் கூறப்பெறுகிறது. ஆழ்ந்த தூக்கத்தில் மனம் கீழே இதயத்துக்குச் செல்கிறது. அத்துடன் அதுதான் மனத்தினது இறுதியான இருப்பிடம் ஆகும். இங்கு ஐந்தாம் அத்தியாயத்தில் குறிப்பிடும் சுலோகங்களில் இரண்டு புருவங்களுக்கும் மத்தியில் மனதை ஒருமுகப்படுத்த வேண்டும் என்று எமக்குச் சொல்லப்பெறுகிறது. பார்வை ஆக்ஞா சக்கரத்தில் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதால் மனதைத் தனது சொந்த இருப்பிடத்தில் ஒருமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதே அதன் குறிப்பாகும். அதன்மூலம் அம் மனம் தனது இருப்பிடத்தில் இருந்து வெளியே திரிவதைக் காட்டிலும் அதனைக் கட்டுப்படுத்துவது இலகுவாகிறது.

## 11) பிராண இயக்கம்

கண்கள் முற்றும் திறந்தனவாயோ, முற்றும் மூடியனவாயோ இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அவை மூக்கு நுனியைப் பார்ப்பதுபோல இருக்க வேண்டும். மனிதர் சில சமயம் பொதுவாக மேற்கொள்ளும் ஒரு மன ஒருமைப்பாட்டு முறையாக இருந்தபோதும் நாம் மூக்கு நுனியில் அதனை ஒருமுகப்படுத்த வேண்டும் என்பது அதன் கருத்து அன்று. கண்கள் பாதி மூடப்பட்டிருக்க வேண்டும் என்பதே அதன் குறிப்பாகும். அதன்மூலம் நித்திரை கொள்ளாமலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே உள்ள பொருள்களால் கவனம் திருப்பப்படாமலும் இருக்க முடியும். அதனைச் செய்வதோடு அவ்வேளையில் எல்லாவகையான ஈடுபாடுகளிலும், கடமைகளிலும் இருந்து விடுதலை பெற்ற உணர்வோடு ஆறுதலாகச் சுவாசிக்க ஆரம்பிப்போம். உளவியல் ரீதியாகச் செய்ய வேண்டியவை ஏதும் இல்லாதபோது மட்டுமே பிராணன் அமைதியாகவும், ஒத்திசைவாக வும், அழகாகவும் இயங்கும். எமது கவனத்தை அகரீதியாக ஈர்க்கும் ஈடுபாடு எம்மிடம் இருந்தால் அந்தத் திசையில் பிராணனும் இயங்கும். அத்துடன் பிராணனுடைய கிளர்ச்சிகள்தான் மனதின் ஆசைகள், செயலில் ஈடுபடும் விருப்பம் என்பவற்றினால் பல திசைகளில் ஈடுபடுவதன் காரணம் அமைகிறது. எனவே நாம் தியானத்துக்காக அமரும்போது முன்கூட்டியே கருதப்பெற்ற எவ்வகைக் கடப்பாடுகளும் இருக்கக்கூடாது. அல்லாவிட்டால் மனதின் ஆழ்ந்த அல்லது மறைந்த ஒரு பகுதி அந்த ஈடுபாட்டை நோக்கி அசையவேண்டி இருக்கும். அதனால் அப் பகுதி கைகளில் மனதை வைத்திருக்கும்.

## 12) கடப்பாடு

நாம் தியானத்துக்காக அமரும்போது மனதை ஒருமுகப்படுத்தும் கடப்பாட்டைத்தவிர வேறு எவ்வகையான கடப்பாடுகளையும் வைத்திருக்கவேண்டியதில்லை. தியானப் பயிற்சியில் ஈடுபடுகின்ற ஒவ்வொருவருக்கும் கூறக்கூடிய ஆலோசனை என்னவெனில், அவர்கள் தியானத் துக்காக அமருமுன் உடனடியாக உள்ளக் கடப்பாடுகள் நிறைவேற்றப் பெற்றிருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதே உண்மையில் எல்லாவிதக் கடப்பாடுகளில் இருந்தும் விலகியிருக்க முடியாதென்பது மிகவும் தெளிவான விடயமே. முழு வாழ்க்கையிலும் செய்யவேண்டிய எல்லாவற்றையும் நிறுத்திவிட வேண்டும் என்பது அதன் அர்த்தம் அன்று. அவ்வாறு செய்வது சாத்தியப்படாது. ஆனால் உடனடியாக எமது கவனத்தை வேறு எங்கேனும் அழுத்தி வைத்திருக்கும் எத்தேவையும் இருக்கக்கூடாது. குறைந்த பட்சம் சில மணித்தியாலங் களுக்கு நாம் விடுதலையானவராக இருக்க வேண்டும். ஒரு நாளின் அரைப்பகுதிகூட நாம் விடுதலையானவராக இருக்கலாம். அதன்பின்பு நாம் ஒரு சிறிய அளவு அமைதியை உணரு வோம். அப்போது உள்நோக்கிய ஓய்வு ஒன்று உணரப்பெறும். அதன்பின் பிராணன்கள் தமது விருப்பப்படி தானாகவே அமைதி அடையும். அதனால் அங்கே மன அடக்கம் இருக்கும். பின்பு பிராணனின் இயக்கமும் தானாகவே ஒத்திசைவு உடையதாக இருக்கும். முழுக் கவனமும் கடவுள் சிந்தனையில் ஈடுபட்டு ஆன்ம விடுதலை பற்றியதாக இருக்கவேண்டும். வாழ்க்கையின் ஒரு சுவாலை ஆன்மாவில் இருந்து எழுவதுபோலப் புலன்களும், மனமும், புத்தியும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். (தொடரும்...

---

## உள்ளத் தூய்மை

**இன்பமும் துன்பமும் உனது மனத்தினின்றும் உண்டாகின்றன. மனமே பந்தத்துக்கும் முக்திக்கும் காரணமாகின்றது. தீய மனம் நரகத்தை தருகின்றது. நன் மனம் பரகதியைத் தருகின்றது. மனத்தழுக்கு அற்றவரே பெரியார். மனத்துக்கண் மாசிலன் ஆதலே எல்லா அறங்களுமாய் ஆதலினால் உன் மனம் பளிங்குபோல் இருக்கட்டும். -வாரியார்-**

*பிரச்சினை இல்லாத மனிதனை விளையாட்டிலிருந்து விலகி விடுகிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லசுரர் மாள, நல்ல சுரர் வாழ

– திரு சிவக்கொழுந்து அவர்கள் –

ஆன்ம ஈடேற்றத்திற்காகவே, ஆலயங்கள் அடியார்களுக்காகப் பூத்திருக்கின்றன. அருள் தரக் காத்திருக்கின்றன. வரம் கொழிக்குமாறு மனமானது இறைஞ்சுகின்றது. உள நெருக்கீடுகளுக்கான பரிகாரமும், பரோபகாரமும், விடுதலையும் ஆலயங்களில் இறைவனால் தரப்படுகின்றன. இன மத மொழி குல நிற பேதங்களுக்கு அப்பால், அவரவர் மொழியில் அவரவர் வேண்டுதலுக்குச் செவிசாய்க்கின்ற இரங்குதலை மிகவும் பொறுப்பாகவும் பேறாகவும் பத்திரமாகவும் இறைவன் தருகின்றான். விலை போட்டும் வாங்கமுடியாத பொக்கிஷமாக இப்பூமியில் எல்லோருக்கும் சமமாகவும் சமாந்தரமாகவும் கிடைக்கிறது. இதற்காக எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி கூறுவதற்கான ஒரு பெரும் வைபவமே மஹோற்சவமாகும். ஆடி மாதம் பிறந்துவிட்டால் பெரும்பாலான ஆலயங்களில் திருவிழாக்கள் தெய்வீக மணங்கமழ தேவர்களும் வந்திறங்குவதனால், அடியவர்கள் பரவசமடைகின்றார்கள். பக்திவயப்பட்டு பண்ணாரப்பாடி கண்ணாரக் கண்டு காதலாகிக் கசிந்து கண்ணீர மல்கிறார்கள்.

இதன் பிரகாரம் இந்த வருடத்தில் முக்கியமான ஆலயங்களின் திருவிழாக்கள் அடுத்தடுத்து இந்த மாதத்திலிருந்து வருவது சோபகிருது வருட பெரும் வரப்பிரசாதமாகும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம், தெல்லிப்பளை துர்க்கை அம்பாள் ஆலயம், நல்லூர் கந்தசுவாமி கோவில், கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயம், இணுவில் காரைக்கால் சிவன் ஆலயம், வியாவில் ஐயனார் ஆலயம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம், வல்லிபுர ஆழ்வார் ஆலயம், கதிர்காம முருகன் ஆலயம், சிலாபம் முனீஸ்வரம் ஆலயம், மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார், மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயம், மண்டூர் கந்தசாமி கோவில், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம், கொழும்பு மலையக ஆடிவேல் திருவிழா, வெருகல் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம், வியாபாரிமூலை இன்பர்சிட்டி சித்திவிநாயகர் ஆலயம், மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயம், அளவெட்டி வெளிவயல் முத்துமாரி அம்மன் ஆலயம், அனலைதீவு ஐயனார் கோவில், அம்பாறை மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்.

இவ்வாறு பல ஆலயங்கள் இலங்கையை ஆரோக்கியமாகவும், அமைதியாகவும், நீதியாகவும், சமதர்மமாகவும் கொண்டு நடாத்துவதில் தவமாகி உள்ளன.

ஆடிப்பிறப்பு, ஆடிச்செவ்வாய், ஆடிவெள்ளி, ஆடிப்பூரம், ஆடிப்பெருக்கு, ஆடிவேல், ஆடி அமாவாசை, ஆடிக்காற்று, ஆடிப்புனல் என ஆடி மாதம் உத்தராயணம் தட்சணாயணம் இரண்டுக்குமான மையப் பொருளாகவும் தேவர்களுக்கான இரவுக்கு உரிய ஆயத்தமாகவும் இருப்பதனால் மானிட சாம்ராஜ்ஜியம் தேவ சாம்ராஜ்ஜியத்தினைப் பேறாக்கவல்ல ஆன்மீகப் பரோபகாரங்களில் அதீதம் செய்கின்றது. தேவர்கள் மகிழ்வதனால் பூமாதேவியும் பூத்திருப்பாள்.

*மனிதர்கள் பலம் இல்லாமல் இல்லை. மனமில்லாமல் இருக்கிறார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாக்களில் மனிதரோடு மனிதராகத் தேவர்களான சுரர்களும் ஒன்றாகி, வல்ல அசுரர்களை ஆமாம் கொடூர வஞ்சகக் கொலைகார துஷ்பிரயோகக் கொள்ளை போதை செய்வோரைத் தண்டிக்குமாறு தவமிருந்து கேட்பதோடு, மக்கள் எல்லோரும் பூரண நலமோடு நீடு வாழவும், சகல பேறுகளையும் தேடியும் கற்றும் உழைத்தும் பேணியும் பெறவும் இறைவனிடம் மன்றாடு வார்கள். இதன் பேறாக வீடும் நாடும் ஊரும் ஆன்ம ஈடேற்றம் அடைகின்றன. பிரார்த்தனைக்கும் மன்றாடுதலுக்கும் நீண்ட பயனுண்டு. தனிப்பட்ட வேண்டுதல்களுக்கு அப்பால் பொதுநல வேண்டுதல்களையே இறைவன் கேட்க விரும்புகின்றான். கேட்டு ஆவன புரிகின்றான். இந் நிலையில், ஆடியின் ஆரம்பம் பிரம்மாதமாகும்.

## ஆடி அமாவாசைத் தீர்த்தம்

கீரிமலையிலே ஸப்த நதிகள் கலக்கும் புனிதமான பெருங்கடலானது, மாவிட்டபுரம் கந்தப்பெருமானுக்கு தீர்த்தமாடும் தீர்த்த சமுத்திரமாகி, கண்டகித் தீர்த்தமாகின்ற அதிசயத்தை ஆடி அமாவாசையன்று அனுபவிக்க முடிகின்றது. எமது மூதாதையர்களின் ஆத்ம பேற்றினைப் போற்றும் வகையிலும், அவர்களை திருப்திப்படுத்தும் வகையிலும், அவர்களின் ஆசீர்வாதத் தினைப் பெற்றுக்கொள்ளும் வகையிலும், அவர்களது எஞ்சிய ஆவல்களைப் பூர்த்திசெய்யும் பாங்கிலும் பித்துரு தர்மகாரியங்கள் ஆடி அமாவாசையன்று சிறப்பாக ஆற்றப்படுகின்றன. குறிப்பாக தந்தையை நினைவுகூர்ந்து பிதுர்தர்ப்பணம் ஆற்றுவதற்கும் அவர்களது தோஷ நிவாரணங்களைப் பெறுவதற்கும் அவர் சார்ந்தவர்களால் விரதம் அனுட்டிக்கப்படுகிறது. தட்சணாயன காலம் ஆடியில் ஆரம்பிப்பதால் ஆடியில் வரும் அமாவாசையானது பிதுர்களின் வழிபாட்டிற்கு மிகவும் புண்ணியமான காலமாகும். சமுத்திரங்களிலும், ஆறுகளிலும், தீர்த்த வாவிகளிலும் நீராடி மூழ்கி எழுந்து பின்வருமாறு வாய்விட்டுப் பிரார்த்தனை செய்வீர்களாக.

"ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி"

என்று ஓதி, தந்தையே, எம்மை நீரே மானுட வடிவமாக படைத்து உயிர் தந்து, உணவு தந்து, உடை தந்து, உலகாள வரமும் தந்து, வாழவும் வீடு தந்து, நீடித்த ஆயுளும் தந்து எம்மைப் பேறாக்கினீர். எல்லாம் வல்ல பரம்பொருள் அழைத்தவுடன் சிவ சாம்ராஜ்ஜியத்தில் புகுந்து சிவகதி பெற்றுவிட்டீர்கள். இன்று ஆடி அமாவாசை தினத்தன்று, நீங்கள் எமக்கு ஆற்றிய அத்தனை பணிகளுக்காகவும், உங்களுடைய ஆன்ம ஈடேற்றத்திற் காகவும், எம்மீது தங்களது ஆசீர்வாதம் தொடர்வதற்காகவும் உங்களை மனத்திலிருத்தி, அந்தண தர்மம், பிதிர் தர்ப்பணம் செய்து, இயலாதவர்களுக்கு உண்டி, உடை, உறையுள், நூல்கள், தானியங்கள் வழங்கி, உங்களை நீள நினைந்து போற்றி வழிபடுகின்றோம். எம்மைப்போல இறைநம்பிக்கையோடு இந்த உலகை வெல்ல வரந்தருவீர்களாக.

அபிஷேகக் கந்தனாக, மாவிட்டபுரக் கந்தன் தீர்த்தமாடும் ஆடி அமாவாசைத் தினமானது, இலங்கை வாழ் மக்களுக்கு அற்புதம் கொழிக்கும் சொற்பதம் நிறைந்த நாளாகும். வரமும் வாழ்வும் வளமும் பெறுவீர்களாக.

*விஞ்ஞானம் பயனுள்ள வேலையாள். ஆனால் மோசமான எஜமான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்கள், முனிவர்கள். முசுகுந்தச் சக்கரவர்த்தி, நளன், அருச்சுனன். ஜமதக்கினி முனிவர், நகுலமுனிவர், மாருதப்புரவீகவல்லி ஆகியோரால் கண்டகித் தீர்த்தம் புண்ணிய தீர்த்தமாகவும், பாவவிமோசனத் தீர்த்தமாகவும் போற்றப்படுகிறது. தந்தைக்காகப் பிரார்த்திப்பவர்கள் அவருடைய பேறான திருவடிக்காகத் தவமிருந்து தீர்த்தமாடுங்கள். மாவிட்டபுரம் கந்தனது திருக்கார்த்திகைத் திருவிழாவும் மாவிளக்குப் பூஜையும், பஞ்சரத பவனியும், கண்டகித் தீர்த்தத் திருவிழாவும் மிகமிக அற்புதமானவையாகும்.

## எந்நிதியும் தருவான் செல்வச்சந்நிதியான்

வல்லி நதிக்கரையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் செல்வச்சந்நிதியான், வீரவாகு தேவருக்கு அருள்புரிந்த வரலாற்றுடன், மருதர் கதிர்காமருக்கான அற்புதமும் நிகழ்த்தியமை வியக்கத்தக்கன. கதிர்காமருக்கு முருகன் நேரிலே காட்சிகொடுத்து, தனக்கு ஆலயம் அமைத்துக்கொள்ளுமாறும், கதிர்காமம் போல வாய்கட்டி பூஜை செய்யுமாறும், 65 ஆலம் இலைகளில் படைத்து அமுதளிக்குமாறும் முருகன் வேண்டிக் கொண்ட திருவிளையாடல் கதிர்காமருக்கு அதிசயமாகி நிகழ்ந்தது. இப்பொழுதும் இச் சம்பவம் நடந்த அமைவிடம் பூவரச விருட்சமாகி நோய் நொடி துன்பம் துயரம் கவலை கண்ணீர் போக்கும் ஒரு வைத்திய மனையாக ஆலயம் திகழ்கிறது. கல்வி அறிவில்லாத ஏழை எளிய மக்களும் சரி, மாடி மனை கோடி பிரபுக்களும் சரி எவருக்கும் அன்னம் பாலிக்கும் இளமுருகனாக வரந்தரக் காத்திருப்பான். அவன் அன்னதானக் கந்தன் அல்லவா? வள்ளிக் கிழங்கு முளைத்துக் கொடிவிடும் நாள் கொடியேற்றமாகும்.

## வல்லசுரர் மாள நல்லருள் புரியும் தெல்லியூர் துர்க்கை அம்பாள்

உழுதுண்டு வாழும் பழுதிலா அடியவர் கதிர்காமரின் பெருந்தவப்பயனால் உழுகுடைப் பகுதியிலே இலுப்பை மரச்சோலையின்கண் உருவாகிய சக்திபீடமே தெல்லியூர் துர்க்காதேவி ஆலயமாகும். மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாக அமைந்த ஆலயம் இதுவாகும். ஆகம முறைப்படி நித்திய நைமித்திய பூஜைகளும், அந்தண சிவாச்சாரிய அனுகூலங்களும், பக்தகோடிகளின் பரோபகாரமும், பணிசெய்து உலப்பிலா ஆனந்தம் பெருக்கும் ஆலய சமூகப்பணிகளும் விண்ணையும் வரவழைக்கும். ஆவணிப்பூரத்தில் கொடியேறி, திருவோணத்திலே தீர்த்தமாடும் அம்பாள், தனம் தானியம் கல்வி கலை உண்டி உறையுள் உத்தியோகம் காணி நிலம் கல்யாணம் நீடித்த ஆயுள் ஆரோக்கியம் பாதுகாப்பு எல்லாம் எல்லோர்க்கும் எப்படியும் தருவாள். தாயாக இருப்பதனால் இளையோருக்கான எதிர்காலத்தை வரமாக்குபவளும் அவளேதான். தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும், தடைகள் வாராத கொடையும், படைகள் அணுகாத பாலிதமும் கொண்ட ஆலயம் வல்லசுரரை விரட்டி ஓடவைப்பதற்கு ஒருபோதும் தயங்காது. அதேவேளை நல்ல சுரரை வாழவும் வைக்கும்.

## அமரர் இடர்தீர அமரம் புரிந்த குமரனே நமதழகன்

செல்லப்பரும் யோகரும் கூடி மகிழ்ந்த அந்த "நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்". ஆம்! புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள்,

*அதிகப் பழங்கள் பழுத்த மரங்கள்தான் அதிகம் கல்லெறிபடுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மவர்கள் உட்பட உலகமே கொண்டாடும் ஒரு உற்சமாக நல்லூர் மஹோற்சவம் இன்று வரலாற்றில் இடம்பிடித்துள்ளது. ஒரு ரூபாவோடு நல்லூரானை அருள்சொரிய வைத்த மாப்பாணர் பரம்பரையினரால் நிர்வகிக்கப்படும் நல்லூரானது, நேர முகாமைத்துவத்தாலும், எல்லோரும் சமன் என்ற கோட்பாட்டினாலும், தம்மை எச்சந்தர்ப்பத்திலும் விளம்பரப்படுத்தாத மகிமையினாலும், எசமான் எப்போதும் முருகனோடு இரண்டற ஒன்றாகிப் பணிசெய்கின்ற பாங்கினாலும், அந்தணப் பெருமக்களின் வேத மந்திர மனோலய உடை நடை பாவனையாலும், மேடை போட்டு, தடல் புடலான மாலை மரியாதை அணிவகுப்பு மேள தாள கோலாட்ட வரவேற்பு யாருக்கும் எவருக்கும் முதன்மை அந்தஸ்து இல்லை என்ற தோரணையாலும் நல்லூர் அன்றும் இன்றும் என்றும் வெல்கிறது. இருபத்தைந்து திருவிழாக்களும் அலங்காரக் கந்தனின் திருவிளை யாடல்களினால் நல்லூர் அருள்மழையில் நனைகின்றது. ஒரு ரூபா என்ற எளிமையினால் உலகமே நல்லூர் முருகனோடு ஐக்கியமாகிறது. அதிசயமாகிறது. வரம் பெறுகிறது. மனிதர்கள் தேவர்களாகின்றார்கள்.

---

ஒருமுறை சுவாமி விவேகானந்தரைப் பார்க்க இளைஞன் ஒருவன் வந்தான். சுவாமி எனக்கு எல்லா வசதிகளும் இருக்கிறது. ஆனால் மன அமைதிதான் இல்லை. படுக்கையில் படுத்தால் தூக்கம் வரமாட்டேன் என்கிறது. கடவுள் நம்பிக்கை நிறைய உண்டு. தினமும் எனக்குப் பிரியமான கடவுளை நீண்டநேரம் வழிபடுகிறேன். ஆனாலும் என் மனம் அமைதியின்றித் தவிக்கிறது. கண்களை மூடி தியானம் செய்ய அமர்ந்தால், மனம் எங்கெல்லாமோ அலைபாய்கிறது. தாங்கள்தான் எனக்கொரு நல்வழி காட்டவேண்டும் என்றான்.

அவனுக்கு விவேகானந்தர் பதில் சொல்வதற்கு ஒரு கதையைக் கூறினார். ஒரு காட்டுப் பகுதியில் உள்ள குகையில் மூன்று ஞானிகள் நெடு நாட்களாக பசி, தாகம் மறந்து தியானத்தில் லயித்திருந்தனர். ஒருநாள் அவர்களில் ஒருவர் வாய் திறந்து சற்று நேரத்துக்கு முன் ஒரு கறுப்புக் குதிரை ஓடிற்று என்று நினைக்கிறேன் என்றார். அதற்கு மற்ற இருவரிடமிருந்தும் எந்தப் பதிலும் இல்லை. மேலும் ஆறு மாதங்கள் ஓடின. அப்போது இரண்டாவது ஞானி அது கறுப்புநிறக் குதிரையாக இருக்க வாய்ப்பில்லை, வெள்ளைக்குதிரை என்று நினைக்கிறேன் என்றார். இவரின் வாதத்துக்கும் மற்ற இருவரிடமிருந்தும் எந்தப் பதிலும் இல்லை. இன்னும் ஆறு மாதங்கள் கடந்தன. கொஞ்சம் சும்மா இருக்கமாட்டீங்களா? இப்படியே நீங்கள் வளவளவென்று பேசிக்கொண்டிருந்தால், நான் வேறு எங்காவது போய் என் தியானத்தை தொடர்கிறேன் என்று கோபப்பட்டார் மூன்றாவது ஞானி. இந்த மூன்று ஞானிகளும், கண்களை மூடித் தியானிப்பதற்கு பதில், மனதை மூடித் தியானித்திருந்தால் இறைவனை அடைந்திருக்க முடியும். அதுவே உண்மையான தியானம். பின் விவேகானந்தர் இளைஞனின் கேள்விக்குப் பதில் கூறினார்.

மன அமைதிபெற சிறந்த வழி சுயநலமற்ற பொதுசேவையில் ஈடுபடுவதுதான் என்கிறார். உன் வீட்டைச்சுற்றி வசிப்பவர்களின் ஏழைகள், ஆதரவற்றவர்கள் இருந்தால் அவர்களுக்கு உதவிகளைச் செய், கவனிப்பின்றிக் கிடக்கும் நோயாளிகளை மருத்துவமனைக்கு அழைத்துச்செல். பிறருக்கு செய்யும் சேவையில்தான் உண்மையான மனத்திருப்தி இருக்கிறது. மனதில் திருப்தி இருந்தால் அங்கே நிம்மதியும், அமைதியும் குடிகொள்ளும். இதை நீ உணராவிட்டால் உன்னால் நிச்சயம் தியானம் செய்ய முடியாது. உன் மனம் ஒருநிலையில் இல்லாமல் அலைபாய்ந்து கொண்டுதான் இருக்கும் என்றார் விவேகானந்தர்.

*சிற்றாறு அழகாக இருக்கும்போது நீர் நிதானமாக ஓடுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| க. மோஷிகா | வதிரி | 1000. 00 |
| திரு செந்தூரன் குடும்பம் | சுழிபுரம் | 5000. 00 |
| திரு செல்வரட்ணம் குடும்பம் | சுழிபுரம் | 1000. 00 |
| அ. ஜனார்த்தனன் | சங்கானை | 1000. 00 |
| தெய்வேந்திரன் குமரன் | லண்டன் | 10000. 00 |
| சீ. ஐங்கரன் | முல்லைத்தீவு | 5000. 00 |
| R. ராஜேஸ்வரி | நெல்லியடி | 1000. 00 |
| திருமதி சி. வசந்தாதேவி | அமெரிக்கா | 20000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| திரு மதனமோகன் குடும்பம் | பிரான்ஸ் | 11670. 00 |
| திரு சசிதரன் குடும்பம், அஸ்மிதா | பிரான்ஸ் | 6770. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| சோ. பரமநாதன் G.S. | குப்பிளான் | 1000. 00 |
| க. ராமநாதன் | கொக்குவில் | 1000. 00 |
| த. சுகந்தன் | கொக்குவில் | 10000. 00 |
| கந்தசாமி நரேந்திரா நினைவாக | ஆவரங்கால் | 15000. 00 |
| பி. அக்ஷரா | உடுவில் | 20000. 00 |
| பொ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| பி. அருண்சாயித் | சுன்னாகம் | 5000. 00 |
| இராசம்மா கதிர்காமர் | கைதடி | 5000. 00 |
| வே. நல்லைநாதர் | சுழிபுரம் | 5000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| N. குணரட்ணம் | மானிப்பாய் | 1000. 00 |
| சி. சாம்பசிவமூர்த்தி | மாவிட்டபுரம் | 2000. 00 |
| சி. சிவயோகம் | புலோலி | 1000. 00 |
| திரு ராஜரூபன் | உரும்பராய் | 500. 00 |
| சுரன், உதா விக்னேஸ்வரன் | கோண்டாவில் | 3000. 00 |
| திரு சிவஞானமூர்த்தி | கல்வியங்காடு | 5000. 00 |
| க. சுப்பிரமணியம் | மிருசுவில் மரக்கறி, 1மூடை அரிசி | 2000. 00 |

*நல்ல மனையாளும் ஆரோக்கியமும் மனிதனின் சிறந்த செல்வமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சி. மணிவாசகன் | கொழும்பு | 10000. 00 |
| இராம ஜெயபாலன் | சங்கானை | 3000. 00 |
| ச. அஜேஸ் | சுழிபுரம் | 10000. 00 |
| வே. அருந்தவநாதன் நினைவாக | அச்சுவேலி | 5000. 00 |
| சி. தர்மராஜா | இடைக்காடு | 5000. 00 |
| திருமதி உ. பேரானந்தம் | தெல்லிப்பழை | 500. 00 |
| விக்னருபன், தர்ஷன், சாயவி | இணுவில் | 500. 00 |
| கா. கிருபாகரன் | இணுவில் | 400. 00 |
| இ. திலகசுந்தரராசா | பத்தமேனி | 1500. 00 |
| மு. விஜிராஜ் | ஆவரங்கால் | 3000. 00 |
| மகேஸ்வரி நினைவாக | கொழும்பு | 500. 00 |
| கல்பனா மனோகரராசா | சுவிஸ்லாந்து | 10000. 00 |
| மா. குலசேகரம் | கோப்பாய் | 5000. 00 |
| செ. ஐடா | புலோலி | 15000. 00 |
| த. ஸ்ரீதரன் | உரும்பராய் | 2000. 00 |
| ஈ. பிரவீனா, ஈ. கிஷானா | சண்டிலிப்பாய் | 5000. 00 |
| திருமதி பா. சந்திரா | லண்டன் | 5000. 00 |
| ம.செ. சபாநாயகம் | மாலிசந்தி | 2000. 00 |
| ஐ. சுஜிகரன் | கோண்டாவில் | 5000. 00 |
| திரு பிரபாகரன் குடும்பம் | திருநெல்வேலி | 1000. 00 |
| ஸ்ரீகாந் செந்தூரன் | திருநெல்வேலி | 5000. 00 |
| பி. அஜித்தா குடும்பம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| பா. சுந்தரம் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| சு. அபிராம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திருமதி ஜெயலட்சுமி கந்தசாமி | இமையாணன் | 15000. 00 |
| மிதுன் ஹரிகேஷ் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| கு. தினேஸ் | கொழும்புத்துறை | 10000. 00 |
| ஸ்ரீ. ஸ்ரீதரன் | கோப்பாய் தெற்கு (கட்டார்) | 50000. 00 |
| ஈ. ரஞ்ஜீவன் | வட்டுக்கோட்டை | 11500. 00 |
| திரு ஜெகதீபன் குடும்பம் | சண்டிலிப்பாய் | 2000. 00 |
| ந. தெய்வேந்திரம் | வல்வெட்டி | 3000. 00 |
| சி. மயூரன் | சித்தங்கேணி | 2000. 00 |
| K.K. தங்கவேலு நினைவாக | குப்பிளான் (கனடா) | 10000. 00 |
| தி. நிரோஷன் | சங்கானை | 1000. 00 |
| S. ஸ்ரீஸ்கந்தராசா | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வே. சண்முகப்பிரியன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| பு. பிரியதர்சினி | சித்தங்கேணி (U.K) | 5000. 00 |
| P. ஆதனா, P. ஆதரா | டென்மார்க் (சங்கானை) | 10000. 00 |

*ஒரு பலவீனமான உடல் மனத்தையும் பலவீனப்படுத்துகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சிந்துஜா அமிர்தராஜ் | திருகோணமலை | 4000. 00 |
| க. ராஜசிங்கம் குடும்பம் | பிரான்ஸ் | 10000. 00 |
| S. பிரத்திகா | சுன்னாகம் | 1000. 00 |
| த. தர்கரன் | அத்தாய் | 10000. 00 |
| பு. மகாத்மஜோதி | நோர்வே | 10000. 00 |
| திருமதி அ. சிரோமி | நெல்லியடி | 15000. 00 |
| க. இராசதுரை | நீர்வேலி | 1000. 00 |
| ப. வல்லிபுரநாதன் நினைவாக | உடுப்பிட்டி | 5000. 00 |
| தினேஸ் கௌசிகா | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| பிரியமது விர்ஷாலி | நவிண்டில் | 10000. 00 |
| வ. துஷானி | உரும்பராய் | 2000. 00 |
| யோ. பிரதீபன் | ஊரெழு | 5000. 00 |
| ச. சிவகரன் | ஏழாலை கிழக்கு | 1000. 00 |
| வி. கருணாநிதி | இணுவில்மேற்கு | 5000. 00 |
| வை. தர்ஷன் | மல்லாகம் | 5000. 00 |
| விசாகன் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| திருமதி கண்ணன் வசந்தா | தொண்டைமானாறு | 10000. 00 |
| திரு இராமலிங்கம் குடும்பம் | நெல்லியடி (சுவிஸ்) | 5000. 00 |
| S. திவாஜினி | சுன்னாகம் | 1000. 00 |
| த. தவனேஸ்வரி | கோண்டாவில் 1புட்டி அரிசி | 1000. 00 |
| த. கிரிதரன் | கோண்டாவில் | 1000. 00 |
| திருமதி ப. அச்சுதானந்தன் | வல்வெட்டித்துறை | 20000. 00 |
| க. விசாலாட்சி | மிருசுவில் | 1000. 00 |
| Dr E. கனகரட்னம் | கொற்றாவத்தை | 5000. 00 |
| ச. சதீஸ்வரன் | இளவாலை | 2000. 00 |
| யோ. விஜயதாஸ் | சங்கானை | 2000. 00 |
| பொன்மணி குடும்பம் | கரவெட்டி | 1500. 00 |
| சி. தயாநிதி | லண்டன் | 9000. 00 |
| க. தவச்செல்வி | ஏழாலை | 5500. 00 |
| சு. கோபிசுதன் | தெல்லிப்பழை | 1000. 00 |
| முருகன் அடியார் | யாழ்ப்பாணம் | 20000. 00 |
| பி. அபிராம் | பரந்தன் | 1000. 00 |
| க. சபேசன் | சங்கானை | 1000. 00 |
| சோ. பகீரதன் | சுன்னாகம் | 50000. 00 |
| த. ஸ்ரீதரன் | உரும்பராய் | 2000. 00 |
| ஜெ. பிரவீனா | அளவெட்டி | 5000. 00 |
| T. நிரோஷன் | சுன்னாகம் | 7000. 00 |
| ஸ்ரீ சரண்யன் | உரும்பராய் | 500. 00 |

*இயற்கை, காலம், பொறுமை இம்மூன்றும்தான் பெரிய மருத்துவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நித்தியலட்சுமி குடும்பம், ஹரிரவி குடும்பம் | நல்லூர் | 5000. 00 |
| தி. நாகரத்தினம் | அல்வாய் | 30000. 00 |
| த. முருகானந்தா மூலம் யோகேஸ்வரி நினைவாக | கொக்குவில் | 2000. 00 |
| திரு அழகரத்தினம் குடும்பம் | கோண்டாவில் | அரிசி 2000. 00 |
| திரு சரவணபவான் | அவுஸ்திரேலியா | 57500. 00 |
| U. காண்டீபன் | கனடா | 5000. 00 |
| ச. கரிகரன், ச. கிரிதரன் | வல்வெட்டித்துறை | 2010. 00 |
| சு. புனிதவதி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ஆதிரன், ஆரனன் | இணுவில் | 1000. 00 |
| பொ. மீனாட்சிசுந்தரம் | வதிரி | 15000. 00 |
| கௌ. துஷ்யந்தி | லண்டன் | 1000. 00 |
| அரவிந்தன் கீர்த்தனா | அமெரிக்கா | 10000. 00 |
| பா. விமலேந்திரன் குரு பிறிண்டேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| இ. மயுதரன் | பருத்தித்துறை | 1000. 00 |
| சி. துவாரகன் | தெல்லிப்பழை | 5000. 00 |
| சி. தனலட்சுமி | பண்டத்தரிப்பு | 10000. 00 |
| ஜெ. கிருபா | லண்டன் | 10000. 00 |
| S. கோபாலகிருஷ்ணர் | கொக்குவில் | 20000. 00 |
| T. ஹரிஸ் | இருபாலை | 52000. 00 |
| வி. பானுஜா, வி. கஜலக்ஷி, வி. அனாஸ் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| க. விஜயமோகன் | பருத்தித்துறை | 5000. 00 |
| த. குமரராஜா | உரும்பராய் | 5000. 00 |
| சி. அருட்சோதி | மீசாலை | 5000. 00 |
| திருமதி ரட்ணேஸ்வரன் பிள்ளையார் விலாஸ் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| திரு யர்ஷன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 3000. 00 |
| திரு சுதாகர் குடும்பம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| தர்ஷன் மன்மதராசா | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| S. உருத்திரானந்தசர்மா | மந்திகை | 2000. 00 |
| செ. சபாரத்தினம் | கோண்டாவில் | 1மூடை அரிசி 1000. 00 |
| சு. பிரதீஸ் | கனடா | 15000. 00 |
| மா. சாம்பசிவம் | நாகர்கோவில் | 7000. 00 |
| த. அதீஸ் | ஏழாலை | 1000. 00 |
| கோபிகா குடும்பம் | லண்டன் | 15000. 00 |
| திரு சதீஸ் மூலம் தம்பாப்பிள்ளை நினைவாக | கனடா | 25000. 00 |
| கி. பிரசாந் | பருத்தித்துறை | 1000. 00 |

(தொடரும்...

*முதுமை உணர்வைப் பொறுத்தது. வயதைப் பொறுத்தது அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் சீதை

– திருமதி பொ. திலகவதி அவர்கள் –

முன்னொரு காலத்தில் நீதிநெறி தவறாது ஆட்சி புரிந்து குடிமக்களால் பாராட்டப்பட்டவன் பத்மாக்ஷன் என்ற அரசன். அவனுக்கு திடீர் என்று ஒரு ஆசை உண்டாயிற்று. லக்ஷ்மிதேவி தன் மகளாக பெற வேண்டும் என்பதே அதுவாகும். அதற்காக காட்டிற்குச் சென்று மகாலக்ஷ்மியை நோக்கி கடும் தவம் செய்தான். அவனது தவத்தைக் கண்டு மகிழ்வுற்ற லக்ஷ்மி தேவியும் அவனுக்கு திருக்காட்சி கொடுத்தாள்.

"உன் தவம் கண்டு மகிழ்ந்தேன். உனக்கு வேண்டிய வரத்தை கேள்" என்றதும் "தாயே! தாங்களே எனக்கு மகளாய்ப் பிறக்க வேண்டும்" எனக் கேட்டான். அதைக்கேட்ட லக்ஷ்மி தேவி முகம் மலர்ந்து "என் பகவான் மகாவிஷ்ணுவின் அனுமதியின்றி நான் உன் மகளாய்ப் பிறக்க முடியாது. ஆகவே நீ தவம் புரிந்து நாராயணனின் வரம்பெறு" எனக் கூறி மறைந்தார். இதைக்கேட்ட பத்மாஷன் மகாவிஷ்ணுவை நோக்கி தவம் புரியவே பகவான் அவன்முன் காட்சி கொடுத்து என்ன வரம் வேண்டும் எனக் கேட்டபோது, தனக்கு லக்ஷ்மிதேவி மகளாய்ப் பிறக்க வேண்டும் எனக் கேட்டான். அதற்கு பகவான் "லக்ஷ்மிதேவி உனக்கு மகளாய்ப் பிறப்பதில் எனக்கு ஒன்றும் தடையில்லை. ஆனால் செல்வம் பெருகும்போது பிறருக்கு பொறாமை உண்டாகி அதனால் துன்பம் உண்டாகும். ஆகவே யோசித்து கேள்" என்றார்.

அதற்கு மன்னனும் "தீனதயாளா! என் முடிவில் மாற்றம் இல்லை. லக்ஷ்மி தேவியை மகளாய் அடையும் பேறை எனக்கு தாருங்கள். அதனால் துன்பம் நேரினும் அதை நான் சமாளிப்பேன்" என்றான். உடனே விஷ்ணு மன்னனது கையில் மாதுளையைக் கொடுத்து "பத்மாக்ஷா இந்தக் கனியில் இருந்துதான் லட்சுமி தேவி தோன்றப்போகிறாள். உன் விருப்பமும் நிறைவேறும்" எனக் கூறி மறைந்தார். பத்மாக்ஷன் அந்த மாதுளையை அரண்மனைக்கு எடுத்துச் செல்லும்போதே அக் கனி பெரிதாக வளர்ந்துவிட்டது. இதைக் கண்ட அரசனும் அதை உடைத்துப் பார்த்தபோது பேரொளிமயமான பேரழகு கொண்ட பெண் குழந்தை இருப்பதைக் கண்டு அக் குழந்தையை வாரி எடுத்து திருமகளே தன் மகளாக வந்ததை எண்ணி பூரிப்புகொண்டு தன் பட்டத்துராணியிடம் கொடுத்து அக் குழந்தைக்கு "பத்மை" எனப் பெயர்சூட்டி வளர்த்து வந்தனர்.

காலம் சுழன்றது. காண்போர் மயங்கும் கட்டழகு பெட்டகமாக வளர்ந்தாள் பத்மை. பத்மைக்கு மணவாளன் தேடும் முயற்சியில் ஈடுபட்டான் அரசன். முடிவில் பத்மையின் சுயம்பர செய்தியை பல தேசங்களுக்கு அனுப்பிவைத்தான். பத்மையின் பேரழகையும், அறிவையும் அறிந்த இளவரசர்கள் பலர் சுயம்பரத்திற்கு வந்தனர். அவ்வாறு வந்த இளவரசர்கள் அனைவரையும் பத்மாஷன் வரவழைத்தான். அலங்காரப் பதுமையாக சித்தரிக்கப்பட்டு வந்த பத்மை அன்னநடைபோட்டு தன் தோழியர் புடைசூழ மண்டபத்தில் நுழைந்தாள். அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகைக் கண்டு இளவரசர்கள் சிலைபோல் நின்றனர். ஆனால் பத்மைக்கு ஒருவரையும் மனம் கவரவில்லை. தன் மகளுக்கு ஏற்ற மணவாளன் சுயம்பர மண்டபத்தில் யாரும் இல்லை என அறிந்த பத்மாக்ஷன் அனைவரையும் நோக்கி, "மன்னவர்களே! இந்த சுயம்பரத்தில் போட்டி ஒன்று உள்ளது. அதாவது ஆகாயத்தில் உள்ள நீல வண்ணத்தை யார் ஒருவர் தன் உடல் முழுவதும் பூசிக்கொள்கிறாரோ, அவருக்கு என் மகளை திருமணம் செய்து கொடுப்பேன்" என்றார்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அனைவரும் கோபம் கொண்டு எழுந்து வாளை உருவ மன்னன் தன் மகள் பத்மையை பாதுகாப்பாக அனுப்பிவிட்டு, தன்னை எதிர்த்தவர்களோடு போர் புரிந்து தன் பகைவர்களால் கொல்லப்பட்டு வீர சுவர்க்கம் அடைந்தான். அவனது துணைவியர்களும் உடன் கட்டை ஏறினர். போரில் வென்ற அரசர்கள் பத்மையை தேடியபோது பத்மை அங்கிருந்த யாக குண்டத்தில் இறங்கி மூழ்கினாள்.

இளவரசர்கள் அவளைத் தேடியபோது கிடைக்கப்பெறவில்லை. கோபம் கொண்ட அவர்கள் பத்மாக்ஷனின் நகரை அழித்துவிட்டுச் சென்றனர். தன் தந்தையின் மரணம், நகரின் அழிவுக்குக் காரணம் தான் என எண்ணி மனம் வருந்திய பத்மை யாககுண்டத்தின் அருகே இருந்து தவம்புரியத் தொடங்கினாள். இந்நிலையில் ஒருநாள் ஆகாயத்தில் புஷ்பக விமானத்தில் அமர்ந்து வந்த இலங்கை வேந்தன் இராவணன் பத்மையை கண்டுவிட்டான். சுயம்பரத்திற்கு வந்தவர்களில் இராவணனும் ஒருவன். அவன் பத்மையை தன்னுடன் வருமாறு வேண்டினான். இதை கேட்ட பத்மை யாககுண்டத்தில் மூழ்கவே யாகத்தீயை நீரைக்கொண்டு அணைத்த இராவணன், யாககுண்டத்தை தோண்டியபோது அதில் இருந்து பிரகாசமான ஐந்து இரத்தினங்கள் கிடைத்தன.

அதை எடுத்துக்கொண்டு இலங்கை வந்த இராவணன் தன் பூஜை அறையில் வைத்து தன் மனைவியிடம், "தேவி! நான் உனக்கு பரிசு தரப்போகிறேன். அது பூஜை அறையில் பேழையில் உண்டு" எனக் கூறினான். "அதை நீ எடுத்து வா" எனவும் கூறினான். அதை மண்டோதரி எடுக்க முயன்றபோது அவளால் இயலவில்லை. இராவணன் தன் பலம் முழுவதும் கொண்டு பேழையைத் திறந்து பார்த்தபோது அதற்குள் அழகிய பெண் குழந்தை இருப்பதைக்கண்ட இராவணன் பத்மையின் கதை சொன்னான்.

இதைக் கேட்ட மண்டோதரி இந்தக் குழந்தையால்தான் பத்மாஷனின் நாடு அழிந்தது. இவளைக் கண்காண இடத்தில் புதைத்து வாருங்கள் என்றாள் மண்டோதரி. இதைக் கேட்ட குழந்தை சிரித்து மன்னா நீ எங்கு புதைத்தாலும் நான் உனைக் கொல்வேன். உன் நாட்டையும் அழிப்பேன் எனக் கூறியது. இராவணன் அக் குழந்தையை எடுத்துச்சென்று மிதிலையில் புதைத்துவிட்டு வந்தான்.

இதன்போது மிதிலையை ஆண்ட ஜனகமகாராஜன் மகா யாகம் ஒன்று செய்ய இடம் கண்டு தாமே கலப்பை கொண்டு உழுதபோது கலப்பையின் நுனி ஏதோ ஒன்றில் தட்டுப்பட்டது. அந்த இடத்தை தோண்டிப் பார்த்தபோது பேழையும் அப்பேழையில் குழந்தையையும் கண்டார் ஜனகர். அக் குழந்தையை தன் மகளாய் ஏற்று சீதை எனப் பெயரிட்டான்.

*வெள்ளம் உயர்ந்தால் மலர் உயரும். உள்ளம் உயர்ந்தால் நீ உயர்வாய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிப்பருவம் வந்ததும் தெய்வீகப் பெண்ணாகிய சீதைக்கு ஏற்ற மணவாளனைத் தெரிவுசெய்ய முன்னொரு காலத்தில் மகாயாகம் செய்தபோது அதன் பலனாய் வருண பகவானால் வழங்கப்பட்ட ருத்திரவில்லை யார் வளைத்து நாண் பூட்டுகிறானோ அவனே தன் மகளுக்கு ஏற்ற மணவாளன் என அறிவித்தான். இதைக் கேட்ட அரசர்கள் பலர் வருகைதந்து பார்த்து திகைத்து திரும்பினர்.

இந் நேரத்தில் அயோத்தியை ஆண்ட தசரத மன்னனிடம் விசுவாமித்திரர் சென்று தம் யாகத்தை அசுரர் அழிக்கிறார்கள். அதைக் காக்க உம் புதல்வனாகிய ராமனை எம்முடன் அனுப்பிவையும் எனக் கேட்டார். இதைக் கேட்ட தசரதர் அச்சம் கொள்ளவே, வசிட்டர் குறுக்கிட்டு ஆலோசனை கூறவே அச்சம் நீங்கி வசிட்டர் ராமரையும், இலட்சுமணனையும் அனுப்பி வைக்க தயாரானார்.

இளவரசர்கள் இருவரும் விசுவாமித்திரருடன் வனம் சென்று குடிலை அடைந்தனர். விசுவாமித்திரர் யாகத்தை காவல் செய்யுமாறு பணித்து யாகம் செய்யத் தொடங்கினார். இவ்வேளை அரக்க கூட்டம் யாகத்தை தடுக்க முயன்றபோது இளவரசர்களது அம்புகளால் அரக்கர் கூட்டம் அழிந்து ஒழிந்தது. இதைக் கண்ட விசுவாமித்திரர் சொல்லொணா மகிழ்வுகொண்டு ராமனை நோக்கி மிதிலை செல்வோம் எனக் கூறினார்.

மிதிலை சென்ற இவர்கள் ஜனகரிடம் ராமனைப் பற்றிக்கூறி வில்லை காட்டுமாறு கூறவே அந்த வில்லை எட்டுச் சக்கரம் உள்ள வண்டியில் வைத்து இழுத்து வந்தார்கள். அந்த இரும்பு பெட்டியை திறந்து பூமாலையை எடுப்பதுபோல் அவ் வில்லை எடுத்தார்.

"...... சீதை எனும் பூந்தோடலர் கொம்பினைச்
சூட்டிட நீட்டும் ஏடவிழ் மாலை
இதென்ன எடுத்தான்!"

அவ் வில்லை எடுத்து வளைத்து நாணைப் பிடித்து இழுத்து உடைத்தான். இதைக் கண்ட ஜனகன் தன் மகள் சீதை ராமனுக்கே எனக் கூறினான். இதை அறிந்த தசரதரும் மகிழ்ச்சி உற்று திருமணத்தில் இணைந்தார். இவ்வாறு பூமியில் அவதரித்த பூமாதேவி சீதாப்பிராட்டியே இலட்சுமிதேவி ஆவாள் என ஆனந்த இராமாயணம் கூறுகிறது.

## நாடுங்கள் கல்லோடை வேலன் சந்நிதி

கல்லோடை வேலன் சந்நிதி யானே
காலங்கா லமாகத் தொண்டைமா னாற்றின்
எல்லைக்கரை தனிலே இருந்து அடியார்
எல்லோர்க்கும் அருளை அள்ளிக் கொடுக்கிறான்
அல்லல்கள் எல்லாம் அகன்று யாவரும்
அறிவுசெல்வம் அகலா வீரத் தோடு
நல்வாழ்வு பெற்று நலமாய் வாழ
நாடுங்கள் கல்லோ டைவேலன் சந்நிதி.

-வ. யோகானந்தசிவம்-

*பணத்தின் மேலுள்ள ஆசைதான் எல்லாத் தீங்குகளுக்கும் ஆணிவேர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விஸ்வமநுப் பிரமச்சார்யா'

# வே. அம்பிகைபாகன் அவர்கள் எழுதிய "செல்வச்சந்நிதி முருகன் கலைத்தேர் அமைப்பியலும் வரலாறும்"

– **திரு பா. தனபாலன்** அவர்கள் –

தனது வரலாற்றை அறியாத சமுதாயம் நினைவாற்றலை இழந்துவிட்ட மனிதனுக்கு சமமாகும். ஈழத் தமிழினம் பல வரலாறுகளைத் தொலைத்து விட்டிருக்கும் நிலையில் ஈழத் தமிழர் பண்பாட்டின் அடையாளமான "செல்வச்சந்நிதி முருகன் கலைத்தேர் அமைப்பியலும் வரலாறும்" நூலை எழுதி வெளியிடும் "விஸ்வமநுப் பிரமாச்சார்யா: வே. அம்பிகைபாகன் அவர்களது பணி போற்றுதற்குரியது. காலத்தின் கடமையாக அவர் செய்த இப் பெரும் வரலாற்று ஆவணம் எம் இன பண்பாட்டு அடையாளத்தைப் பறைசாற்றுகின்றது.

எமது ஈழத்தமிழினத்தின் மரபுரிமைப்பேறு, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், இம்மரபுரிமைப் பேறுகளைக் குறித்த வரலாற்றுக் காலத்திலேயே சந்திப்பது ஒரு செழுமைமிக்க கற்றல் அனுபவத்தைத் தரும் வகையில் கலை வரலாற்றாசிரியர் வே. அம்பிகை பாகனால் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. சந்நிதி முருகனின் ஆலய வரலாற்று அற்புதங்களும் சிறப்புக் கலைத்தேரின் உருவாக்கமும் வரலாறும் இந்நூலில் எழுதப்பட்டுள்ளது.

இக் கலை வரலாற்று விமர்சன நூல் காட்டும் அறிவுலகம் தனித்துவமானது; விரிந்தது. இவ்வளவு சிறப்பாக இந்நூலை எழுத ஆழ்ந்த இந்து மதம் சார் அனுட்டானமும் அறிவும் தேடலும் ஆற்றலும் ஒருங்கிணைய வேண்டும். ஓர் உயர்வான ஆய்வாளராக கல்வியியலாளராக, சிற்பவியலாளராக, சிற்பியாக, நிர்மாண ஸ்தபதியாக, தேர்க்கலை இலக்கண அறிஞனாக, வரலாற்றியலாளராக என இந்துப் பண்பாட்டியற் பன்முக ஆளுமை கொண்ட வகிபாகங்களைப் பிரயோகிக்கும் வே. அம்பிகைபாகன் அவர்களாலேயே முடியும். இவ்வகையில் அவருக்குக் கிடைத்த இறையருள் எமக்கு இந்நூலாகக் கிடைத்தமை பெரும் பேறாகும். நூலாசிரியரின் உயர்வான இச்சேவையை இதயபூர்வமாகப் பாராட்டுகின்றோம்.

இந்நூலில் ஆலய வரலாற்றிற்கு ஓர் அறிமுகம், இந்துத் தேர்க்கலைப் பண்பாடு என்ற வகையில் ஆய்வும் அமைப்பும், தேர் அமைக்கப்பட்ட வரலாறும் கலைப் பாணியும் முதலில் அறிவார்ந்த ரீதியில் விளக்கப்படுகின்றது. தொடர்ந்து தேர்ச் சிற்பத்தில் ஆலய பௌராணிக வடிவம், முன்வைக்கப்பட்ட விசமத்தனங்கள் என்பவை தெளிவாக எடுத்துரைக்கப் படுகின்றன. அத்தோடு ஸ்தபதி இலக்கணம், கலைஞர் உலகம், யாழ்ப்பாண ராசதானிக் கால சிற்பக் கலைப் பண்பாடு, ராஜசில்பி விலாடசங்கிலி பாரம்பரியம் ஆகிய விடயங்கள்

*அன்பு குறைந்திருக்கும்போது குற்றங்கள் பெரிதாகத் தெரிகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று ஆதாரங்களுடன் வெளியிடப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து மயிலிட்டி புகழ்பெற்ற முருகேசு குடும்பம், ஸ்தபதி ஜெயகாந்தன்; உருவாக்கமும் பன்முகத்திறனும், வரலாற்றில் செல்வச்சந்நிதி முருகன் சிற்பப் பெருந்தேர், செல்வச்சந்நிதி முருகன் கலைத்தேருக்கு ஓர் மதிப்பீடு, ஆய்வுக்கு ஓர் நிறைவுரை என நூல், மிகப்பல தகவல்களையும் தரவுகளையும் ஒருங்கிணைத்து ஆய்வு நோக்கில் எல்லோருக்கும் விளங்கக்கூடிய வகையில் உருவாக்கப் பட்டுள்ளமை பாராட்டத்தக்கது. நூலாசிரியருடைய துறைசார் வாண்மைத்துவ அணுகுமுறைக்கு வெற்றி கிடைத்துள்ளது. எமது ஈழ மண்ணின் முக்கியமான நூலாக இது கொள்ளப்படும்.

ஈழத்துத் தமிழ்க்கலை வரலாற்று ஆய்வுகளில் சிற்பக்கலை தொடர்பாகப் போதுமான கவனம் செலுத்தப்படாமை, மிகப்பெரும் வேதனையளிக்கின்றது. ஈழத்தமிழ் கலை சமய அறிஞர்களால் இலக்கிய விமர்சனம், நவீன சிற்ப ஓவியங்கள், ஏனைய கலைகள் கவனிக்கப்பட்ட அளவிற்கு மரபு நிலைப்பட்ட கோவிற் கட்டட, சிற்ப, ஓவியக் கலைகள் தொடர்பான நூல்களோ ஆய்வுகளோ போதுமான அளவு இல்லை. அவை வெளிவருவதற்காக ஆதரவுகளும் இல்லை. இது ஈழத்தமிழினத்தின் மரபுரிமைக் கலையடையாளத்தை மறைத்துவிட்டுள்ளது. இம்மறைப்பை நீக்க வந்த ஒரு முன்மாதிரி உதாரண நூலாக "விஸ்வமநுப் பிரம்மாச்சார்யா" வே. அம்பிகைபாகன் அவர்களால் எழுதப்பட்டுள்ள "செல்வச்சந்நிதி முருகன் கலைத்தேர் : அமைப்பியலும் வரலாறும்" என்னும் தற்புதுமைப்படைப்பு விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை.

மிகவும் கவர்ச்சிகரமாக, எளிமையாக ஆய்வு ரீதியாக, வரலாற்று ஆதாரங்களுடன் எடுத்தியம்பும் அழகிய நூலாகவுள்ளது. ஈழத்தமிழர் கலை அடையாளத்தை நிரூபிக்கும் ஒரு ஆதார நூலாக, குறியீடாக இந்நூல் அமைகின்றது.

இந்நூலை எல்லாத் துறைசார் ஆய்வாளர்களும் பாடசாலை மாணவர்களும் பொது வாசகர்களும் வாங்கிப் படிக்க வேண்டும். பயன்பெறுதல் வேண்டும்.

தொடர்ச்சியாக எட்டு நூல்களை எழுதி வெளியிட்ட நூலாசிரியர், தொடர்ந்தும் இப்பணியைச் செய்து வரலாற்று ஆதார கலை, சிற்பம், பண்பாடு தொடர்பாக நூல்களை வெளியிட வேண்டும். அதற்கான ஆதரவுகளை அனைவரும் வழங்க வேண்டும். அதற்கு என்றும் சந்நிதியான் அருட்கடாட்சம் கிடைப்பதாக.

---

பெற்றோர்களே! உங்கள் குழந்தையைக் கவனியுங்கள். குழந்தைப் பருவத்தையும், பாலப் பருவத்தின் தொல்லைகளையும் கடந்து யௌவனமடைகின்றான். இப்பொழுது அவனுக்கு தன் உடல் மட்டுமே என்ற எண்ணம் தலைதூக்கி நிற்கிறது. ஆசைகள் கரைபுரண்டு ஓடுகின்றன. அவைகள் நிறைவேறாவிட்டால் கோபம் கண்ணை மறைக்கிறது. உடல் வளர்ச்சி பெறுவது போலவே கர்வமும், அகங்காரமும் வளர்கிறது. "நான்", "எனது" என்ற உணர்வு தேக சம்பந்தப்பட்டதாக ஆகிவிடுகிறது. இதனால் அவர்கள் செய்யும் பாவங்களுக்கு நீங்களும் உடந்தையாகி விடுகிறீர்கள். இதைத் தவிர்ப்பதற்கு சுவாமி விவேகானந்தர் கூறியதுபோல, சிறுவயதிலேயே ஏதாவதொரு சமயக்கல்வியை அவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள். இந்த இளம் பிள்ளைகளுக்கு உடலையும் தாண்டிய ஒரு பரிமாணம் வாழ்வில் உண்டென்பதை ஆன்மீகம்தான் கற்றுத்தர முடியுமென்று அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

*பணம் பேசத் தொடங்கினால் உண்மை ஊமையாகிவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரதேவ நாயனார்

– திரு சிவம் அவர்கள் –

நக்கீரர் சிவபிரானையன்றி ஏனைய கடவுளரைப் பாடாத தருக்குடையவர். ஒன்பதாந் திருமுறையில் நக்கீரர் பாடியதாகப் பத்துப் பிரபந்தங்களுண்டு. அவற்றில் திருமுருகாற்றுப் படையுமொன்று. பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தில் நக்கீரர் பற்றிய வரலாறுகள் உண்டு. சீரதானத்திப் புராணம் பரங்கிரிப் புராணத்திலுமுண்டு. எனினும் திருமுருகாற்றுப்படை பாடிய வரலாறு பற்றியே அடியேன் இங்கு விவரிக்கிறேன். அது தொடர்பாக,

சண்முக பாண்டியன் தனது மனைவியின் கூந்தலை முகர்ந்து கூந்தலுக்கு இயற்கை மணமுண்டா என்பதைத் தெரிவதற்காகத் தனது கருத்தையமைத்துப் பாடும் புலவருக்கு ஆயிரம் பொற்காசு கொண்ட முடிப்பைத் தருவதாகச் சங்கத்தார் சபையில் தெரிவித்தான். தருமி என்ற புலவன் தன் வறுமை நீங்க அப் பொதியைப் பெறுவதற்காக ஆலவாய் பெருமானிடம் இரந்து கேட்டான். தருமிக்கிரங்கிய சொக்கநாதப் பெருமான்

கொங்குதேர் வாழ்க்கை என்னும் செய்யுளில்,

“மயிலியற் செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவுமுளவோ நீயறியும் பூவே”

என இறுதியடிகளையுடைய பாட்டைத் தருமிக்கு வழங்கினார். தருமி அப் பாட்டை பாண்டியனிடம் காட்ட, அப் பாண்டியன் தனது கருத்துக்கிசைவாக அப் பாடல் இருப்பதைக் கண்டு பொன் முடிப்பை தருமிக்கே வழங்க எண்ணினான். அப் பொன்முடிப்பை தருமி வாங்க வந்த தருணம் இப் பாடலில் பிழை இருக்கின்றது என நக்கீரர் தடுத்தார். உடனடியாக தருமி சோமசுந்தரக் கடவுளிடம் முறையிட்டார். அதுகேட்ட சொக்கர் கோபங்கொண்டு ஒரு பிராமண வடிவத்தை மேற்கொண்டு பாண்டியன் அவையில் வந்து பொற்கிழி பெறாது தருமியைத் தடுத்தவர் யார்? எனக் கேட்டபோது, நக்கீரர் நானென எழுந்து பாட்டில் மங்கையர் கூந்தலுக்கு இயற்கையில் மணமுண்டு எனப் பாடியது பிழையென வாதிட்டார். தேவ மகளிர் கூந்தலும் சொக்கநாதர் தேவி கூந்தலும் அப்படியா? என ஆம். அவர்களுடைய கூந்தலுக்கும் மணமில்லை. என்று கூறவே அந்தச் சிவபிராமணர் தமது நெற்றிக்கண்ணைக் காட்டினார். சிவமெனக் கண்டுமே அடங்காத நக்கீரர், “நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றந்தான்” என்று கூறவே அகங்காரத்தினால் “நம்மையும் பகைத்தனை, நமது தேவியின் கூந்தலையும் நகைத்தனை” குட்ட நோயினால் பீடிக்கப் படுக” எனச் சாபமிட்டார்.

உடனே நக்கீரர் தனது பிழையைப் பொறுத்தருளுமாறு வேண்டலும் அதைக் கேட்ட இறைவன் இரங்கி நீ திருக்கையிலையைக் கண்டாலே இந் நோய் தீரும் என சாபத் தீர்வும் கூறினார். ஆகவே நக்கீரர் காடு மலை எல்லாம் கடந்து செல்லும்போது அருகிலேயுள்ள ஓர்

*மற்றொருவன் உன்னைப் புகழட்டும், உன்னை உன் வாயால் புகழாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர் நிறைந்த குளத்தடியில் தங்கினார். தங்கியவர் குளக்கரையிலிருந்து தவஞ் செய்தார். அப்போது மேலே ஓங்கிவளர்ந்த ஒரு ஆலங்கிளையிலிருந்து ஓர் இலை அக் குளத்தில் விழுந்து துடிப்பதைக் கண்டு தமது தவத்தை இடை நிறுத்திவிட்டுச் சென்று அதைப் பார்த்தார். இலையின் நீரில் விழுந்த பகுதி மீனாகவும், மேற் பகுதி பறவையாகவும் ஒன்றையொன்று இழுக்கக் கண்டு அதிசயப்பட்டார். அதனால் அவரது தவத்துக்கு ஊறு உண்டாயிற்று. அந்த நிலையில் தவத்திற் பிழைபட்ட தொளாயிரத்து தொண்ணூற்றொன் பதின்மருடன் மேலும் ஒருவரைத் தேடிய பூதமொன்று தவத்திற் பிழைபட்ட நக்கீரரையும் வந்து தனது குகைக்குள் தூக்கிச் சென்று அடைத்தது.

அதனால் வருந்திய புலவர் தமது தருக்கொழிந்து முருகப்பெருமானை நினைந்து அந்த இக்கட்டிலிருந்து தன்னைக் காப்பாற்றியருளுமாறு திருமுருகாற்றுப்படையைப் பாடத் தொடங்கினார். ஆறுபடை வீடுகளாகிய திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர்ச்சோலை என்பவற்றைப் பாடிய நக்கீரர் மேலும் பத்து வெண்பாக்களையும் உருகியுருகிப் பாடினார்.

தன்னை நம்பி அன்பு குழையப் பாடிய நக்கீரரை காப்பாற்றுமுகமாக முருகப்பெருமான் ஓடோடி வந்து அந்தக் கொடிய பூதத்தைக் கொன்று நக்கீரருடன் அக்குகையில் அடைபட்டிருந்த ஏனையோரையும் விடுதலை செய்தார். எல்லோரும் முருகனை போற்றித் துதித்துப் பாடி வணங்கினர். முருகப்பெருமான் அவர்களுக்கு அருள்புரிந்து மறைந்தருளினார்.

அன்றுதொட்டு திருமுருகாற்றுப்படை பக்தி நூலாகக் கருதி ஓதப்பட்டு வருகிறது. இதன் பெருமைகருதி சங்க நூலாகிய பத்துப்பாட்டில் முதலாம் பாட்டாகச் சேர்க்கப்பட்டுள்ளது. நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களும் இந்நூலை உரை விளக்கத்துடன் முன்னரே பதிப்பித்து வெளியிட்டுள்ளார். இதில் ஒவ்வொரு படைவீட்டின் சிறப்பையும் படிப்பவர் நன்குணர்ந்து படிப்பின் முருகனருள் நிச்சயம் கிடைக்கும்.

வரலாற்றாசிரியர் திரு குல. சபாநாதன் அவர்கள் எழுதிய தமிழ்நாட்டுப் படைவீடுகளில் ஒன்றாக செல்வச்சந்நிதி திருக்கோவிலையும் காட்டியுள்ளார். அவ் வகையில் சந்நிதி வேற்பெருமான் மேன்மையுள்ள தெய்வமெனப் போற்றப்படுகின்றார்.

அவனருளால் அவன் தாள் பணிவோமாக.

---

"கவலை" நாளைய தினத்தின் துக்கத்தை குறைக்க எந்தவிதத்திலும் பயன்படப் போவதில்லை. அதேநேரம் இன்றைய தினத்தின் சந்தோசத்தை அழித்துவிடுகிறது. விதி, விதி என்றே சொல்லிக்கொண்டு எல்லாவற்றுக்கும் விதியின்மேல் பழிபோட்டு வீணராகி விடாதீர்கள். மதியைப் பயன்படுத்துங்கள். மறைந்துவிடும் துயரமெல்லாம்.

சில தவறுகளினால் நேற்றையபொழுது துன்பத்தில் கழிந்ததெனில், அதையே நினைத்து இன்றைய பொழுதையும் இழந்துவிடாது மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ளுங்கள். துன்பத்தின் தளைகளெல்லாம் துவண்டு ஓடிவிடும்.

*பணிவான சொற்கள் வாழ்க்கைப் பாதையை எளிமையாக்குகின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பெண் கவியரசிகள்

(தொடர்ச்சி...

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

## 08) கணவனுடன் தீப் பாய்ந்த கனிமொழியாள்

"பூத பாண்டியன்" செந்தமிழ்ப் பாண்டிய நாட்டை ஆண்ட பாண்டிய மன்னர் மரபினனான ஓர் அரசன். அவன் குடிகளை ஒரு குறையும் நேராதவாறு காப்பதில் கண்ணுங் கருத்தும் உடையவன். செங்கோலினன், வீர உணர்ச்சி மிக்கவன், பகைவரைப் போரில் அஞ்சாது எதிர்த்து வெல்லும் ஆற்றல் பெற்றவன், கல்வியில் தேர்ந்த புலமை வாய்ந்தவன், சிறந்த பாடல்கள் இயற்றும் திறனும் அவனுக்கு இருந்தது. ஒல்லையூர் என்னும் இடத்தை பகைவரை வென்று கைப்பற்றியமையால் ஒல்லையூர் தந்த பூத பாண்டியன் எனவும் அவன் அழைக்கப்பட்டான்.

புகழின் மிக்க அந்தப் பூத பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு, பொற்பும் கற்பும் பொருந்திய மாதர்மணி; கணவனோடொப்பக் கல்வி நலனும் கவிபாடும் திறனும் கொண்ட கவியரசி. புலவர் பெருமக்களால் நன்கு மதிக்கப்படுபவர். மானத்தை உயிரினும் ஓம்பும் உயர் பண்பினர். கணவன்பால் கரையற்ற காதல் உடையவர்.

அழகிலும் கல்வியிலும் அறிவிலும் அன்பிலும் ஒத்த பண்பாடுடையார் இருவர், கணவனும் மனைவியுமாகக் கலந்து வாழும் காதல் வாழ்க்கையல்லவா இன்ப வாழ்க்கை! பூத பாண்டியனும் அவன் தேவியாகிய பெருங்கோப் பெண்டும் ஈருடலுக்கு ஓருயிர்போல உளம் ஒருமித்த அன்புடையோராய், துறக்க வாழ்வும் வெறுக்கத்தக்கதாம் என்னுமாறு சிறக்க இன்ப வாழ்வில் திளைத்திருந்தனர்.

எத்தகைய வாழ்வும் - இன்ப வாழ்வோ துன்ப வாழ்வோ நெடுங்காலம் நிலைபேறுடையதாக இருத்தல் இல்லையே மாறுபடும் - அழியும் - இயல்பினதே. இதுவே உலக நியதி. எதிர்பாரா வண்ணம் சில நாட்களாகக் கொடு நோய் பற்றி வருத்தியது பூதபாண்டியனை. பலவற்றாலும் முயன்றும் அஃது எவ்வகையாலும் நீங்காமல் முடிவில் அவன் உயிரையே உடலினின்றும் நீக்கிவிட்டது. இணைபிரியாத காதலியைத் தனியே தவிக்கவிட்டுச் சென்றான் பூதபாண்டியன். பாவம்! அன்புருவாய ஆருயிர்க் காதலனைப் பிரிந்து எவ்வாறு உயிர் தரித்திருப்பாள் அம் மாதரசி! அழுவதால் பயன் யாது? கணவனுடன் தீயில் விழுந்து உயிர் துரத்தலே தக்கதாம் என உறுதிகொண்டாள். அப்பொழுது அருகிலிருந்த மதுரைப் பேராலவாயர் முதலிய புலவர்கள் பெருங்கோப் பெண்டின் துணிவுகண்டு துணுக்குற்றனர். தம்மை ஒத்த பெரும் புலமை வாய்ந்த மெல்லியலாரைத் தமிழுலகம் பெறாப் பேறாக பெற்று வைத்தும் இழக்க நேரிடுமோ என வருந்தினர். இரு பெரும் புலவர்களை ஒரு சேர இழப்பதென்றால் எவர் உள்ளந்தான் உருகாது! தீப் பாய விடாமல் தடுத்தல் வேண்டும் எனத் தீர்மானித்து, "அம்மையே! வேண்டா, உமது துணிவு கடிது! தீப் பாய்தல் ஒழிக. எமது வேண்டுகோளை மனங்கொள்க" எனக் கூறித் தடுத்தனர். அங்ஙனம் தம்மை விலக்கிய அறிஞர்களை நோக்கிப் பின்வருமாறு (பாடலாகக்) கூறினார் செந்தமிழ்ச்செல்வி. "உன் கணவனோடு நீயும் செல்க எனக் கூறவேண்டிய நீங்கள் அங்ஙனம் கூறாது 'வேண்டா'

*சரித்திரம் படைக்கும் மனிதனுக்கு அதைப்பற்றி எழுத நேரமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என விலக்குகின்றீர்களே! எனது நிலையை நன்கு ஆராய்ந்து அறியாது அறிஞர்களே! கணவனை இழந்தவள் கைக்கொள்ளவேண்டிய கைம்மை நோன்பின் தன்மையை நீங்கள் அறிவீர்களோ! அணிலினது வரி போலும் வரியையுடைய வளைவான வெள்ளரிக்காயை அரிந்து இடப்பட்ட விதைகள் போன்ற தண்ணீரிலிருந்து பிழிந்தெடுத்த சோற்றுருண்டைகளை எள்ளின் துவையல், புளியிட்டு வேக வைத்து வேளைக் கீரை இவற்றோடு உண்டு, பாயில்லாமல் பருக்கைக் கற்களின்மீது படுத்து உறங்குதல் வேண்டுமே! இவ்வித துன்ப வாழ்வை நான் அடையவேண்டும் என்பதோ உங்கள் விருப்பம்! அவ்விதக் கைம்மை நோன்பால் வருந்தும் பெண் அல்ல யான். பருத்த கட்டைகளால் அடுக்கப்பட்ட இப் பிணப்படுக்கை உங்களுக்குத் துன்பம் தருவதாகலாம்; ஆனால் எனக்கு, பெரிய தோள்களையுடைய எனது கொழுநன் இறந்துபட்டானாக, இதழ்கள் விரிந்த தாமரை மலர்கள் நிறைந்த குளிர்ந்த பொய்கைபோல இத் தீயும் குளிர்ச்சியாகவே இருப்பதாம். ஆதலின், என்னைத் தடுத்தல் வேண்டா" எனக் கூறியவாறே தீயில் பாய்ந்து உயிர் துறந்தார்.

அதுகண்டு புலவர்கள் அடங்காத் துயரமும் வியப்பும் கொண்டனர். கைம்மை நோன்பின் கொடுமையை வெறுத்தனர். அரசியார் தம் காதலன் மாட்டுக் கொண்டிருந்த அன்பின் பெருக்கையும், சுடு தீயையும் தண் புனலெனக் கொண்டு தீயில் குதித்த பெருமையையும், அவரது கற்பின் மாண்பினையும் எண்ணி எண்ணிப் பலவாறு புகழ்ந்து, கையறு நிலையினராகப் புலம்பிச் சென்றனர்.

வாசகர்களே! செந்தமிழ்ச் செல்வி அம்மையார் பாடிய செய்யுள் வடிவிலுள்ள அந்த நல்லுரையையும் நீங்கள் பார்க்க வேண்டும். பழம் பாடல், எனவே இரண்டொரு முறை திரும்பத் திரும்பப் படியுங்கள். அதன் பொருளும் நன்கு விளங்கும். இதோ அது:

"பல் சான்றீரே! பல் சான்றீரே!
செல் எனச் சொல்லாது ஒழிக என விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல் சான்றீரே!
அணில் வரிக் கொடுங்காய் வாள் போர்த்திட்ட
காழ் போல் நல்விளர் நறுநெய் தீண்டாது
அடையிடக் கிடந்த தாகபிழி பிண்டம்
வெள் எள் சாந்தொடு புளிவெய்து ஆட்ட
வேளை வெந்தை வல்சியாகப்
பரல் பெய் பள்ளிப் பாய் இன்று வதியும்
உயவல் பெண்டிரேம் அல்லேம் மாதோ!
பெருங் காட்டுப் பண்ணிய கருங்கோட்டு ஈமம்
துமக்கு அரிது ஆகுக தில்ல எமக்கு எம்
பெருந்தோள் கணவன் மாய்ந்தென அரும்பு அற
வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை
நன்னிரும் பொய்கையும் தீயும் ஓரற்றே"

(காழ்- விதை; அடை- இலை; சாந்து- துவையல்; வல்சி- உணவு; உயவல்- கைம்மை நோன்பு)

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் அத்திபாரமே அன்புதான்

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

அன்பு என்பது மனித மனதிலே தோன்றுகின்ற ஒரு மெய்ப்பாடு எனலாம். அன்பு என்பதன் பொருள் "தான் அற்ற நிலை" ஆகும். அது பிறர்நலம் பேணுகின்ற ஒரு நிலையைக் குறிப்பதாகும். அன்பு என்பது மனித உணர்வு, நீங்கள் செய்யும் செயல் அல்ல, நீங்கள் இருக்கும் நிலை. அன்பு என்றால் உணர்வின் இனிமை உங்களுக்குள் வந்துவிட்டது என்று அர்த்தம். அன்பு ஒரு பந்தம் மட்டுமல்ல, எல்லை இல்லாததன் எல்லைக்கு மிதந்து செல்லச் செய்யும் மிதவை. அத்துடன் மனனிலை சார்ந்த பல்வேறு வகையான உணர்வுகளையும் அனுபவத்தையும் குறிக்கிறது. பொதுவாக அன்பு என்பது ஒரு வலுவான ஈர்ப்பு மற்றும் தனிப்பட்ட உறவுமுறை இணைப்பின் உணர்வைக் குறிக்கிறது. மனிதநேயம், இரக்கம் ஆகியவற்றை குறிக்கும் ஒரு நல்லொழுக்கமே அன்பு. மேலும் மற்றொருவரின் நன்மைக்காக பரிபூரணமான அக்கறையும், தன்னலமற்ற விசுவாசம் கொண்ட ஒரு ஒழுக்கமான மனநிலையை அன்பு எனலாம்.

எப்போது அன்பு ஏற்றுக்கொள்ளப்படவில்லையோ நகர்ந்து செல். எப்பொழுது அன்பு பாராட்டப்படவில்லையோ விலகிச் செல். எது உண்மையான அன்பு என்று காலம் கற்றுக்கொடுக்கும். வன்மம் கையில் வாள் கொடுக்கும். அன்பு கையில் பூங்கொத்தைக் கொடுக்கும். அன்பில்லா உள்ளம் ஒரு பாழ்வீடு. அன்பு எங்கிருக்கிறதோ, அங்கு பாசமும் பணிவும் அடைக்கலம். வாழ்க்கை என்ற மலரில் அன்பு என்பது தேன் போன்றது. மிகவும் சிறந்த மனிதன் அன்புள்ளவன். மாறுதல் கண்டவுடன் மாறும் அன்பு அன்பாகாது. அன்பின் மூலமாக செய்யப்படும் ஒவ்வொரு செயலும் ஆனந்தத்தைக் கொண்டுவந்தே தீரும். அமைதியையும் ஆசியையும் கொண்டுவராத அன்புச் செயல்கள் உலகத்தில் எதுவும் இல்லை.

ஆத்திரத்தால் நாம் இழப்பது அறிவை, கோபத்தால் நாம் இழப்பது குணத்தை, பொறாமையால் நாம் இழப்பது நட்பை, பேராசையால் நாம் இழப்பது செல்வத்தை, அத்தனையையும் திரும்பப் பெறலாம் அன்பினால் மட்டுமே. அன்பைவிடக் கூரிய ஆயுதம் இல்லை. "தூய்மை, பொறுமை, விடாமுயற்சி இவை மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை யாகும். அத்துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்பு இருந்தாக வேண்டும்" என்பது விவேகானந்தரின் பொன்மொழி ஆகும். "அன்பு செய்யும் பெண்ணின் நெஞ்சம் எப்போதும் இளமை உடையது" இது டேவிட்ஹியூம் என்பவரது பொன்மொழியாகும். "எங்கே அன்பு இருக்கிறதோ அங்கேதான் வாழ்வு இருக்கிறது" காந்தியடிகளின் பொன்மொழியாகும்.

திருக்குறளின் எட்டாவது அதிகாரமாக அன்புடைமையை திருவள்ளுவர் வகுத்துள்ள திலிருந்து அன்பின் உயர்வை அறிய முடிகின்றது. "அன்பகத்து இல்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண் வற்றல் மரம்தளிர்த் தற்று" அதாவது, மனத்தளவில் அன்பு இல்லாதவர்கள் வாழ்க்கை பாலைவனத்தில் பட்டமரம் தளிர்ப்பதைப் போன்றதாம் என்கிறார் வள்ளுவர்.

*உழைக்கும் கரங்களே உலகை உருவாக்கும் கரங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு" அதாவது அன்பு என்ற பாதையில் யார் நடக்கிறார்களோ அவர்களுடைய உடம்பே உயிருள்ள உடம்பாம். மற்றவர்களுக்கு எலும்பைப் போர்த்திய தோலாலான உடம்பு சவம் போன்றதாகும் என்கிறார் வள்ளுவர். "அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு" அதாவது, உலகத்தில் இல்லற இன்பம் அனுபவித்து புகழ் பெற்றவர்களின் சிறப்பு என்பதெல்லாம் அவர்கள் அன்பைக் கண்டுபிடித்து வாழ்ந்த முறையினால்தான் ஆகும் என்பது வள்ளுவர் கருத்தாகும்.

நல்லொழுக்கப் படிமங்கள் அழிவுப் பாதையில் செல்கின்றன. இதனால் ஏமாற்றுதல், போட்டி, பொறாமை, நம்பிக்கைத் துரோகம், பழிவாங்குதல், பொய்யுரைத்தல் எனும் வகையான கீழ்மைக் குணங்கள் மேலோங்கியுள்ளன. இவற்றின் பரம்பலை நடந்தேறும் சம்பவங்களின் அடிப்படைத் தார்ப்பரியங்களூடே கண்டுகொள்ள முடிகிறது. மனிதர்கள் மனிதப் பண்போடு வாழ்ந்தாலே நல்ல மனித சமுதாயத்தை உருவாக்க முடியும். இதற்கு அன்பு உணர்வு எல்லோர் மத்தியிலும் இழையோட வேண்டும். இங்கு மனிதன் இருக்கின்றான். ஆனால் அவனுள் குடிகொண்டிருந்த மனிதம் தொலைந்துவிட்டது. இதனால் மனிதன் மிருகத்தனங்களோடு வாழ முற்பட்டுள்ளான். வாழும் காலத்தில் அன்பும், பொறுமையும், சாந்தமும் கொண்டவர்களாக வாழ்வதே இனிய இல்லறத்தின் அடிநாதம். அன்பு என்பது நெருக்கமான உள்ளப் பிணைப்பு அன்புக்கு முதலிடம் கொடு வாழ்வு வளம் பெறும்.

உலகில் அதிகம் தேடப்படும் ஒரு விடயம் அன்புதான். அன்பைப் பெறுவதில் நாம் இருக்கிறோமே தவிர கொடுப்பதில் பின்வாங்குகிறோம். எனவே அன்பு தூர்ந்துபோய் இருக்கிறது. அன்புக்கு பஞ்சம் நிலவுகிறது. அன்பு சிறைப்பட்டிருக்கிறது. கிடைப்பவை அன்பைப் போன்று இருக்கிறதே ஒழிய உண்மையான அன்பு இல்லை. அன்பு பரிசுத்தமானது. மானிட வாழ்க்கை நலமாக, இன்பமாக இயங்க அன்பு தேவை. அன்பு உள்ளங்களை இணைக்கும் ஆற்றலுடையது. "ஆற்றல் மிக்க அன்பு" என்பார் அப்பரடிகள். அன்பு வளரும் தன்மையுடையது. அன்பின் உணர்ச்சிக்கு எல்லை கிடையாது. நிபந்தனை கிடையாது. தம்முடன் பழகுவோரின் விருப்பங்களை அறிந்து அவர்தம் பாங்குக்கு ஒத்துப் பழகினால்தான் அன்பு வளரும். உறவும் வளரும். இதனை "ஒத்தறிவான்" என திருக்குறள் கூறுகின்றது. அன்பு என்பது பொறுப்பாக நடத்தப்பட வேண்டும். இல்லாவிட்டால் அது நிலைக்காது. எதுவும் ஏதோவொரு விதத்தில் உங்களுக்கு சொந்தமாக இருந்தாலொழிய, உங்களால் அதனை இப்போது அன்பாகப் பார்க்க முடிவதில்லை.

அன்பே இந்த உலகை நலமாக வைத்திருக்கும் நல்ல மருந்து. உண்மையான அன்பை மற்றவர்களுக்கு கொடுத்துப் பார், அதைவிட அதிகமான அன்பை ஒருநாள் அவர்களிடமிருந்து நீ பெறுவாய். எப்போதும் வெறுக்காமல் இருப்பதுதான் உண்மையான அன்பு. சிலர் அன்பை வார்த்தைகளால் உணர்த்தலாம். சிலர் உணர்வுகளால் உணர்த்தலாம். சிலர் அன்பு புரியாமல் அதைக் காலம் உணர்த்தும்போது கண்கள் கலங்கும். அன்பினால் திருத்தமுடியாததோ, குணப்படுத்த முடியாததோ எதுவுமில்லை. நீ உலகத்தை மாற்றலாம். அதற்கு ஓர் ஆயுதம் தேவை. அதுதான் அன்பு. அன்பே சிவம்.

*சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய கிரேக்கவாதிகள் நான்கு விதமான அன்பை அடையாளம் கண்டனர். குடும்ப உறவு, நட்பு, காதல், தெய்வீக அன்பு. கூடுதலாக அன்பு என்பது மதம் அல்லது ஆன்மிகம் சார்ந்த பொருளையும் உள்ளடக்கியுள்ளது. இத்தகைய பன்முகத் தன்மைகொண்டது அன்பு. அன்பு என்ற சொல்லை வரையறுப்பது மிகவும் கடினம். மனிதர்கள் மனிதர்களுக்கு எதிராக ஈடுபடும் கெடுதல்களை மன்னித்து அவர்களை ஒன்றாக இணைக்கவும், இனங்களாக ஒன்றுபட்டு ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வதை எளிதாக்கும் ஒரு செயற்பாடாகவும் அன்பைப் புரிந்துகொள்ளலாம்.

அன்பு அகத்திலே இருப்பதை அவர்களது செயற்பாடுகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். அது மறைத்துவைக்க முடியாதது. அன்பினால் இன்புற்று வாழ்ந்தால்தான் உலகம் நிலைபெற்று இயங்கிக்கொண்டிருக்கும். அன்புதான் வாழ்க்கை. வாழ்க்கையின் அத்திபாரமே அன்புதான். உறவில் விரிசல்நிலை ஏற்படாதிருக்க அன்பு அத்தியாவசியமானதாகும். புன்னகையுடன் கூடிய அன்பான வார்த்தைகள்போதும் எத்தனையோ பிரச்சனைகள், பிணக்குகள், தவறுகள், கசப்பான உணர்வுகள் ஆகியவற்றை நீக்கிக்கொள்வதற்கு. பெண் என்பவள் என்னதான் குடும்பத்தின் ஆணிவேராக இருந்தாலும் பிடிமானமாய் அன்பை வேண்டிநிற்பவளாகவே இருக்கிறாள். அன்பு பெண்மைக்கு பெருமை சேர்க்கும் மிகப்பெரிய சொத்து. அன்புதான் பெண்ணின் பெருமை. பெண்ணின் பலம். அன்பின்மூலம் பெண்கள் தம்மை பாதுகாத்துக் கொள்ளலாம். அதைவிடுத்து வலிமையால் இருக்க முடியும் என நினைப்பது தவறு. பெண்கள் அன்பை இழப்பதால்தான் குடும்பத்தில் பல பிரச்சனைகள் தோன்றுகின்றன. கணவனுடன், குழந்தைகளுடன், பிள்ளைகளுடன், சகோதரர்களுடன் பெற்றோருடன் அன்பு பாராட்டி நடக்காத சந்தர்ப்பங்களில் குடும்ப மகிழ்ச்சியை இழக்கவேண்டி நேரிடும். உறவுகளுக்குள் சண்டை வருவது சாதாரண விடயம். அவற்றை ஆணைவிட பெண் நினைத்தால் இலகுவாக அன்பினால் உறவை நிலைக்க வைக்க முடியும்.

ஆண் எதைச் செய்தாலும் அதை அன்புடன் செய்யவேண்டுமென்று பெண் எதிர்பார்ப்பாள். வாழ்க்கையில் அரவணைப்புக்கு அடுத்து அவள் விரும்புவது அன்பையும், அன்பு செய்யப்படுவதையும்தான். எனவே இருவரும் ஒருவருக்கொருவர் அன்புடன் இயங்குவார்களாயின் வாழ்வு சிறக்கும். திருமண வாழ்க்கை சரியான பாதையில் பயணிக்க அன்பு மிகவும் அவசியம். அன்பு எப்போது வாழ்க்கையில் விலகிச் செல்கிறதோ அதன் வளர்ச்சிப் படியில் விவாகரத்து வந்து சேரும்.

குழந்தைகளதும் சிறுவர்களதும் உடல், உள வளர்ச்சிக்கு முக்கியமானவற்றுள் ஒன்று பெற்றோரது அன்பு. இன்றைய அவசர உலகில், அனேகமான பெற்றோர் தமது சிறுவர்களுடன் அன்போடு உறவாடி, அவர்கள் மனநிலைக்கேற்ப அவர்களது தேவைகளைப் பூர்த்திசெய்ய நேரமில்லாதுள்ளனர். இதன் விளைவாக பலர் உளரீதியாக பாதிக்கப்படுகின்றனர். அத்துடன் யாரிடம் அன்பு இல்லையோ அவர்கள்தான் களவு, கொள்ளை, கற்பழிப்பு, கலாசார சீரழிவுகளில் ஈடுபடுவர். எனவே சிறு வயது முதலே அன்பை ஊட்டி வளர்த்தால் பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்கும்.

*வேலை செய்வதில் அவசரமும் கூடாது, இடைவெளியில் இளைப்பாறவும் கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி மாத வாராந்த நிகழ்வுகள்

**06.10.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் புரட்டாதி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சிவ. ஆறுமுகசாமி J.P. அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

[ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி]

309 ஆவது மலர்

---

**13.10.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

**20.10.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "மகாபாரதம்" **(தொடர்)**

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

**27.10.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் ஐப்பசி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு ஐ.கோ. சந்திரசேகரம் J.P. அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள்

[ஆசிரியர் - சைவப்புலவர்]

310 ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: DOP/NEWS/103/2023

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org